Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1460)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 27 புதன்கிழமை (09.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 221
















# கிழக்கு மாகாண சபையை கலைத்துவிட ஆலோசனை

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் சபையை கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அரச தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிணங்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கிழக்கு மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அரச தரப்பு முக்கியஸ்தர் குறிப்பிட்டார்.

தேர்தலுக்காக கிழக்கு மாகாண சபையினை ஜுன் மாதத்தின் எந்த நேரத்திலும் கலைக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. முதலில் மாவட்ட ரீதியாகவும் பின்னர் மூன்று மாவட்டங்களையும் இணைத்து இக்கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகபெரும, ஏ.எல்.எம்.அதாவுல்லா, கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக்கிரம,

19 ஆம் பக்கம் பார்க்க


## கலைக்க முடியாது நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபையை உரிய காலத்திற்கு முன்னர் கலைப்பதனை தடுக்கும் வகையில், வடமத்திய மாகாண முதலமைச்சர், ஆளுநர் உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிராக மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. பிரதிவாதிகள் அனைவரும் எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தலையெடுக்கிறது மலேரியா



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது 7 பேர் மலேரியா மற்றும் மூளை மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சுகாதாரப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக டெங்கு நோய் அதிகரிப்பு என மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு அதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இருந்தார்கள்.

ஆனபோதிலும் மலேரியா நோயை இனங்காணாமல் விழிப்புணர்வற்ற நிலையில் இருந்துள்ளார்கள்.

வன்னிப் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தருபவர்கள் மற்றும் ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வருபவர்கள் மலேரியா காய்ச்சல் தொடர்பான இரத்தப் பரிசோதனை மேற்கொண்டால் மலேரியா நோயை இலங்கையில் முற்றாக ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

அத்துடன் நுளம்புக்கடி ஏற்படாது பாதுகாப்பதற்கு கற்பூரவள்ளி இலைகளின் சாற்றை எமது உடலில் பூசுவதுடன், நுளம்பு வலைகள் மற்றும் நுளம்பு விரட்டி எண்ணெய் (சிற்றெல்லா) புல் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகளை பாவிப்பதன் மூலம் நுளம்புப் பெருகத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் ஆயிரம் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். புதிதாக நியமனம் பெறும் பட்டதாரி ஆசிரியர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடசாலைகளிலேயே கடமையாற்ற வேண்டும் என்றும் இல்லையேல் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும்

19 ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில் மினி சூறாவளி

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் நேற்று மாலை திடீரென வீசிய மினி சூறாவளி காற்றினால் பல குடிசை வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. அண்மையில் அப்பகுதியில் மீள்குடியேறிய மக்களின் குடிசைகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.

அதேவேளை வடக்கு, கிழக்கு மலையகம் உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் வீசிய பலத்த காற்றினால் 620க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம்

19 ஆம் பக்கம் பார்க்க



## முல்லை – மாங்குளம் வீதி புனரமைக்கப்படுகிறது

(முல்லைத்தீவு)

30 வருடங்களின் பின்னர் முல்லைத்தீவு-மாங்குளம் ஏ-34 பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. 3,800 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதியினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - கண்டி ஏ - 9 வீதியில் மாங்குளம் முதல் முல்லைத்தீவு வரை உள்ள 49 கிலோமீற்றர் தூரமே இவ்வாறு புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

யுத்த காலத்தில் இவ்வீதி பெருமளவில் சேதமடைந்திருந்த நிலையில், யுத்தத்துக்குப் பின்னர் அப்பகுதிகளில் மீளக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மீள்குடியேறிய மக்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்திற் கொண்டு இவ்வீதியின்

19 ஆம் பக்கம் பார்க்க

## திண்மக் கழிவகற்றல் தேசியக் கொள்கை தயாராகிறது

(கொழும்பு)

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பான தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சுற்றாடல் துறை அமைச்சும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சும் இணைந்து இத் தேசிய கொள்கையைத் தயாரிக்கும். இதற்கு சுகாதார அமைச்சு முழுமையாக ஒத்துழைப்பு நல்கும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைய நுளம்புப் பெருக்கம் தொடர்பாக சுகாதார அமைச்சின் நுளம்பு குடம்பிகள் குறித்த நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் பல

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மருந்துகளுக்கு இலங்கையில் தடை இல்லை

(கொழும்பு)

இலங்கையில் இந்திய மருந்துப் பொருட்கள் எவையும் தடை செய்யப்படவில்லையென இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. இந்திய மருந்துப் பொருட்கள் சில இலங்கையில் தடை செய்யப்பட்டதாக இலங்கையிலுள்ள ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் இதனை மறுத்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம், அவ்வாறான முறைப்பாடுகள் எவையும் இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து தமக்கு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. இந்திய லோக்சபையில் இந்த தகவல் எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

## சரிந்தது முட்டை விலை

(குருநகர்)

சந்தைகளில் தற்சமயம் மிகவும் மலிவாகக் கிடைக்கும் பொருள் கோழிமுட்டை ஒன்றுதான். நேற்று முட்டை ஒன்று 7 ரூபாவாக விலை போனது. இவ் விலையானது கடந்த 20 வருடங்களுக்குப் பிறபாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் முட்டை ஒன்று 25 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனையானதும் உண்டு. (68)

## இறக்குமதியில் புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளையும் இந்த ஆண்டில் கணிசமாக கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். மாற்றமடையும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய இறக்குமதி வரையறை மாறுகின்ற நிலையில், இந்த வருடம் அது 20.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதல்

19 ஆம் பக்கம் பார்க்க

## நகர வீதிகள் காப்பற் மயம்



யாழ்.மாநகர சபையின் கீழ் உள்ள குருநகர் 4 ஆம் குறுக்கு வீதி நேற்று காப்பற் வீதியாக புனரமைக்கப்பட்டது.

சுமார் 300 மீற்றர் நீளமான இவ்வீதியின் புனரமைப்பு ஈ.பி.டி.பி. யின் யாழ்.நகரப் பொறுப்பாளர் றீகனின் மேற்பார்வையில் நடைபெற்றது. (எஸ்)

# உற்பத்திப் பொருட்கள் பிரதேசத்தின் சிறப்பை வெளிப்படுத்த வேண்டும்


(நெடுந்தீவு)

எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சிறப்பான ஒரு நிலையை எட்டுவதற்கு வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்வதோடு எமது பிரதேசத்தின் சிறப்பையும் பறைசாற்றுபவையாக அமைதல் வேண்டும் என சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளரும், ஈ.பி.டி.பி. யின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளருமான தானியல் றெக்சியன் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொழிற்திறன் கண்காட்சி 2012 நெடுந்தீவு தேவா கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர், இப்பிரதேசம் நல்ல கலைப் படைப்பாளிகளையும், உற்பத்தியாளர்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு பிரதே சமாகும். இங்குள்ள வளங்களையும் பொருட்களையும் சிறப்பான முறையில் கையாண்டு சிறந்த படைப்புக்களை படைப்பதற்கு உரிய ஒரு முன்னோடிக் களமாக இவ்வகையான பயிற்சி நிலையங்கள் உந்து சக்தியாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது எனத் தெரிவித்தார்.

இப்பிரதேசம் மிகவும் இயற்கை வளம் நிறைந்த ஒரு பிரதேசம். இவ்வளங்களை பயன்படுத்தி பெருமளவான பொருட்களை கைவினைப் பொருட்களாகவும் உற்பத்திப் பொருடகளாகவும் உருவாக்கிக கொள்ள முடியும் என பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றிய திருமதி நவமணி ஜெயராணி தெரிவித்தார்.



நெடுந்தீவு பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச வைத்திய அதிகாரி செல்வி நன்னித்தம்பி மகேஸ்வரி, கிராம அலுவலர் திருமதி ஜெ.ரவீந்திரன் க்டற்படை மக்கள் தொடர்பு அதிகாரி எஸ். விஜயகுமார உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியில் தையல் பயிற்சி மாணவர்களால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.


## சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனை

உடுவில் தெற்கு, மானிப்பாய் புதுமடம் சித்திவிநாயகர் ஆலய இடது புறத்தில் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0779276130
0773391377 (R/134)

### காணி விற்பனை

சுதுமலை தெற்கில் சிறிய வெறும் காணி ஒன்றும் ஆறு பரப்பு தென்னங்காணியும் விற்பனைக்கு உண்டு. இவை கோவில், தபாற்கந்தோர், பாடசாலை என்பவற்றை அண்மித்த ஒழுங்கைப் பகுதியில் நல்ல சுற்றாடலில் உள்ளன.

தொடர்பு : க.சீவறட்ணம், றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/133)


## பரிசளிப்பு விழா

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையில் விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விஞ்ஞானப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், ஒலிம்பியாட் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு மெதடிஸ்த பெண் உயர்தரப் பாடசாலையில் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரோகினி கருணேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் டி.விக்னேஸ்வரன், சிறப்பு அதிதியாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மற்றும் மாகாண விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவனருள் ராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (116)


### காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)
### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

## அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதி 1596/17 இலக்கங்கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் கிளைகளின் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைபொதுச்சபைக் கூட்டங்களை 12.05.2012ஆம் திகதி சனிக்கிழமை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் நடத்துவதற்குக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களை நியமித்துள்ளேன்.

| கிளை இல | கிளையின் பெயர் | நேரம் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரம் |
|---|---|---|---|---|
| 01 | தோப்புக்காடு | மு.ப.10.00 மணி | க.பாலகிருஷ்ணன் | கிளைக்கட்டட முன்றல் (முன்னர் கிளை இயங்கிய இடம்) |
| 02 | விளாணை | மு.ப.10.00 மணி | க.கமலநாதன் | யா/சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலை |
| 03 | களபூமி | மு.ப.10.00 மணி | வி.ஜெயந்தன் | கிளைக்கட்டட முன்றல் |
| 04 | கணேசன் | மு.ப.10.00 மணி | இ.பாலச்சந்திரன் | யா/Dr.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் |
| 05 | காரைநகர் | மு.ப.10.00 மணி | தா.தவமன்னன் | கிளைக்கட்டடம் பின்புறம் |
| 06 | ஆலடி | மு.ப.10.00 மணி | க.நிமலன் | யா/யாழ்ற்ரன் கல்லூரி |
| 07 | சிவகாமி Mini City | மு.ப.10.00 மணி | வை.கைலைநாதன் | கிளைக்கட்டட முன்றல் |
| 08 | கோவளம் | மு.ப.10.00 மணி | தி.வித்தககலாநிதி | கோவளம் சனசமூக நிலையம் |
| 09 | வியாவில் | மு.ப.10.00 மணி | சி.குணாளன் | கிளைக்கட்டட முன்றல் |
| 10 | ஊரி Mini City | மு.ப.10.00 மணி | க.திசாகரன் | யா/ஊரி அ.மி.த.க. பாடசாலை |
| 11 | பாலாவோடை | மு.ப.10.00 மணி | வே.பிரதீஸ்குமார் | கிளைக்கட்டட முன்றல் (முன்னர் கிளை இயங்கி இடம்) |
| 12 | வாரிவளவு | மு.ப.10.00 மணி | அ.விமல்ராஜ் | கிளைக்கட்டட முன்றல் (முன்னர் கிளை இயங்கி இடம்) |
| 13 | நீலிப்பந்தனை | மு.ப.10.00 மணி | த.கண்ணதாசன் | வெற்றிநாதன் அரங்கம் சனசமூக நிலையம் SM கேணியடி |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்குச் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காது விடினும், குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன். முல்லை.காரை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்கள் யா/Dr.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு சமுகமளித்து கிளை 04 உடன் சேர்ந்து வாக்களிக்க முடியும்

ஒப்பம்
வி.கே.அருந்தவநாதன்,
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1499)



## அறிவித்தல்

### 18 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
### 101/25 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இல.101/25, ஸ்ரான்லி வீதியில் (மக்கள் வங்கி ஒழுங்கை) பதினெட்டு (18) மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத் தொலைத்தொடர்பு இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

(C/1497)



## அறிவித்தல்

### 100 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
### 51, ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இல. 51, ஆனந்தனவடலி வீதி, கொழும்புத்துறையில் (100) நூறு மீற்றர தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர பாக மாநகர சபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக்கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத் தொலைத்தொடர்பு இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

(C/1498)



## அறிவித்தல்

### 24 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
### 62/20 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இல. 62/20, ஸ்ரான்லி வீதியில் (24) இருபத்திநான்கு மீற்றர் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத் தொடர்புக்கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத் தொலைத் தொடர்பு இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்புத் தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

(C/1500)

சமையல் மோசமானால் ஒரு நாள் நஷ்டம்.
அறுவடை மோசமானால் ஒரு வருடம் நஷ்டம்.
விவாகம் மோசமானால் ஆயுள் முழுவதும் நஷ்டம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## பிரான்சில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

பிரான்சில் ஞாயிறன்று நடந்த இரண்டாம் கட்ட ஜனாதிபதி தேர்தலில் சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிரான்ஷ்"வா ஹொலாந்த் சுமார் 52 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 22 ஆண்டுகளுக்குப் பின் சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் பிரான்சின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த 17 ஆண்டுகளாக வலதுசாரிக் கொள்கைகளை முன்னிறுத்தியவர்களே பிரான்சின் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டு வந்தனர். 1995 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

பிரான்ஸ் நாட்டு வரலாற்றிலேயே இதுவரை எந்த ஒரு ஜனாதிபதி மீதும் இந்த அளவுக்கு வெறுப்பு இருக்கவில்லை என்கிறார்கள். பதவியிலிருக்கும் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுறுவது இது இரண்டாவது முறையாகும்.

சர்கோஸி, பொருளாதார நெருக்கடியைப் போக்க மக்களை அசௌகரியப்படுத்தும் சிக்கன நடவடிக்கையில் இறங்கியது ஒரு காரணம். கார்லா புரூணியைக் காதல் திருமணம் செய்து கொண்டதும் மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. பல பிரச்சினைகளில் சர்கோஸி எடுத்த அமெரிக்க ஆதரவு நிலையையும் மக்கள் ரசிக்கவில்லை.

நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்து விட்டது என்று வெளிப்படையாக அறிவித்து, சிக்கன நடவடிக்கையாக முதலில் உத்தியோக ஓய்வு பெறும் வயதை 60–லிருந்து 62–ஆக உயர்த்தினார் சர்கோஸி. ஓய்வூதியப் பணத்தை மிச்சம் பிடிப்பதற்காக இதைச் செய்யப்போக, வேலைவாய்ப்புக்குக் காத்திருந்த இளைஞர்கள் கொதித்தனர்.

வலதுசாரிக் கொள்கைகள்தான் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்று பிரசாரம் செய்து பதவிக்கு வந்திருக்கிறார் ஹொலாந்த். சர்கோஸி அளித்த சலுகைகள் மற்றும் திட்டங்களை மறுசீரமைக்கப் போகிறார். கோடிக்கணக்கில் சம்பாதித்துவரும் மிகப்பெரிய நிறுவனங்களுக்கு வரிவிதிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். நியாயமான குறைந்தபட்ச ஊதியம், ஊழியர்களுக்கு சலுகைகள் போன்ற பல்வேறு உறுதிமொழிகளையும் அளித்திருக்கிறார்.

ஹொலாந்த் சொல்வதையெல்லாம் செய்ய முடியுமா என்பதும், அதனை நாடாளுமன்றம் அனுமதிக்குமா என்பதும் சந்தேகம். நாடாளுமன்றத் தேர்தலிலும் சோஷலிசக் கட்சிக்கு அதிக இடங்கள் கிடைத்தால்தான், சொன்னதையெல்லாம் ஹொலாந்த் செய்ய முடியும். இல்லையென்றால், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்காமல் அவர் அறிவித்ததெல்லாம் வெறும் தேர்தல் வாக்குறுதிகளாகவே இருந்துவிடும்.

ஒரு மில்லியன் யூரோவுக்கு அதிகமாக சம்பாதிப்போருக்கு 75 வீதம் வரி விதிக்கப்படும் என்கிற அவரது அறிவிப்பெல்லாம் சாத்தியமே இல்லை என்றும் சொல்கிறார்கள். அத்தகைய நடவடிக்கையில் ஹொலாந்த் இறங்கினால், அந்த அளவுக்குச் சம்பாதிப்போர் யாரும் பிரான்ஸில் வசிப்பதையோ, தொழில் நடத்துவதையோ தவிர்த்துவிடுவார்கள். பிறகு, பிரான்ஸின் நிதி நிலைமை மேலும் மோசமடையும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

வலதுசாரிப் பொருளாதாரக் கொள்கையால் ஏற்பட்ட நெருக்கடி, ஹொலாந்தின் வெற்றிக்குச் சாதகமான அம்சமாக இருந்திருக்கிறது. இந்த முடிவு அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் எதிரொலிக்கும் என்றும் கூறுகிறார்கள். ஆனால், எந்த ஒரு தலைவனாலும் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு நுகர்வுக் கலாசாரம் மக்களை மாற்றி விட்டது. உலகளவில் மக்களிடம் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. ஆகையால் பொருளாதார ரீதியாக எந்த ஆச்சரியத்தையும் எதிர்பார்ப்பதற்கில்லை என்றே வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள்.

- ஆசிரியர் -

# வடக்கு, தெற்கு நல்லிணக்கத்திற்கு கூட்டமைப்புடன் இணையத் தயார்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, தெற்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்த தமிழ்த் தேசியக கூட்டமைப்புடன் இணைநது செயற்படத் தயார் என ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான உறவுகள் வெறும் மேதினப் பேரணிகளுக்கு மட்டும் வரையறுக்கப்படமாட்டாது என கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான இலக்கு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தமிழ் அரசியல் கட்சிகள் பிரிவினைவாதத்தை கைவிட்டு, பிரதான அரசியல் பிரவாகத்தில் இணைந்து கொள்ளத் தயார் என்பதனை உலகிற்கு எடுத்துச் சொல்ல முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் அரசாங்கத்திற்கு முக்கிய பொறுப்பு உள்ளது.

எவ்வாறெனினும், துரதிர்ஷ்டவசமாக ஆளும் கட்சிக்குள் அரசியல் தீர்வுத் திட்டத்தை எட்டுவது தொடர்பில் முரண்பாடான நிலைமை நீடித்து வருகிறது.

13 ஆவது திருத்தச் சட்ட மூல அமுலாக்கம் தொடர்பிலும் அரசாங்கம் இதுவரையில் உறுதியான நிலைப்பாட்டை வெளியிடத் தவறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வாழைப்பழ விலை வீழ்ச்சி; விவசாயிகள் கவலை

(நீர்வேலி)

வாழைப்பழத்தின் விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் வீழ்ச்சி கண்டுள்ளதாக நீர்வேலி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக வீசி வரும் கடும் காற்றின் காரணமாக வாழை மரங்கள் முறிந்தமை, விரைவில் காய்கள் பழுத்தமை, இதனால் வாழைப்பழ வருகை சந்தையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் நீர்வேலி வாழைக் குலைச் சந்தையில் கதலிப்பழம் கிலோ 15 ரூபாவாகவும், இதரைப் பழம் 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மண்ணெண்ணெய் விலையின் அதிகரிப்பு உட்பட பல்வேறு செலவுகளை மேற்கொண்ட நிலையில், வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியானது தமக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கொடுப்பனவு வழங்கக் கோரி தொழிற்சங்க நடவடிக்கை

### - அரச வைத்தியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக ஓரிரு தினங்களுக்குள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தர அதிகாரிகளுக்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்கியிருந்ததாக சங்கத்தின் செயலாளர் சந்திக்க எப்பிடகடுவ தெரிவித்தார்.

நேற்றுவரை 8 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்தியர்களுக்கு தமது அன்றாட கடமைகளை நடத்திச் செல்ல முடியாத அளவிற்கு போக்குவரத்து கொடுப்பனவு பிரச்சினை தலைதூக்கியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 7 இலட்சம் கண்ணிவெடிகள் வடபகுதியில் அகற்றல்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில், ஆயிரத்து 936 சதுர கிலோமீற்றர் பரப்பளவில 7 இலட்சத்து 91 ஆயிரத்து 620 கண்ணிவெடிகள் இராணுவ கண்ணிவெடியகற்றும் பிரிவினர் மற்றும் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டிருப்பதாகவும், அகற்றப்பட்டவை அனைத்தும் உடனடியாகவே அழிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் இன்னமும் 124 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடியகற்றப்பட வேண்டியுள்ளது.

மேலும் வடக்கில் மொத்தமாக 1418 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் 1314 சதுர கிலோ மீற்றர் பகுதியில் அகற்றப்பட்டிருக்கின்றன.

இதேபோல் யுத்தகாலத்தில் அதிகளவு (219,940) கண்ணிவெடிகள் யாழ்.மாவட்டத்திலேயே புதைக்கப்பட்டுள்ளன. அடுத்த நிலையில் கிளிநொச்சி (214, 240), வவுனியா (118, 054), முல்லைத்தீவு( 104, 351), மன்னார் (103, 265) என்ற அளவில் உள்ளது.

இதேவேளை யுத்தம் நிறைவடைந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்ட கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகள், மூன்று மாகாணங்களில் 5000 சதுர கிலோமீற்றர் பகுதியில் இருப்பதாக எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் 2061 சதுர கிலோமீற்றர் பகுதியிலேயே கண்ணிவெடிகள் இருப்பது தொழில் நுட்ப ஆய்வுகள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வரும் அதேவேளை யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் மழை பெய்ததைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டு டெங்கு நோய் பரவக் கூடிய ஆபத்து ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. இதனையொட்டி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நாடெங்கிலும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது. இது தொடர்பாக பணிமனை தகவல் தருகையில்;

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் பிரதேசமட்ட நுளம்புக்கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளது.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாளாக 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான ஏழு நாட்களிலும் ஏழு வலயங்களிலும் அந்தந்தப் பிரதேச வளங்களனைத்தையும் ஒன்றிணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வீடுகள், நிறுவனங்கள், பொது இடங்கள், பராமரிப்பற்ற இடங்கள் போன்றவற்றில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளில் சகல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பொது அமைப்புகள், பொது மக்கள், பொலிஸ், பாதுகாப்புப் படையினர் ஆகியோரை பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# முழுமையான மீள்குடியேற்றமே அபிவிருத்திக்கு வழிவகுக்கும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்து மீள்குடியேற அனுமதிககப்பட்ட பிரதேசங்களில் மக்கள் முழுமையாக மீள்குடியேறும் போதே அங்கு முழுமையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம அபிவிருத்தி அமைப்பின் பொது மண்டபத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரதேசங்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் எமக்கு அதிகளவான அழுத்தங்கள் இருந்தன. அந்த வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாம் உயர்பாதுகாப்பு வலயங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை சாத்தியமாக்கி மக்களை மீளகுடியேற அனுமதித்தபோது அந்த மீள்குடியேற்றம் முழுமையான வெற்றியைப் பெறவில்லை.

மக்கள் மீள்குடியேற்ற செயற்பாடுகளில் தங்களின் முழுமையான பங்களிப்பினை செலுத்தும் போது மட்டுமே அந்தப் பிரதேசங்களில் முழுமையான அபிவிருத்திச் செயறபாடுகளை முன்னெடுக்க முடியும். யுத்தம் காரணமாக முழுமையாக அழிந்து போன பிரதேசத்தில் எல்லாவற்றையும் ஏற்படுத்திவிட்டு மக்களை மீள்குடியேற்றுவது என்பது யதார்த்தமானது அல்ல. அழிந்துபோன உட்கட்டுமானங்களையும், வசதி வாய்ப்புக்களையும் குறுகிய காலத்திற்குள் ஒருமித்து ஏற்படுத்திவிட முடியாது. அவைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட முடியும். அந்த வகையில் இந்தப் பிரதேச மக்களினது அடிப்படை வசதிகள் படிப படியாக பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்தப் பொது நோக்கு மண்டபத் திறப்பு விழாவில வலி.தெற்கு பிரதேச செயலர் நந்தகோபாலன், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி. டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளருமான பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலி.தெற்கு பிரதேச உறுப்பினர்களான தேவராஜா, ராஜசேகரம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் விஷ்ணு றஞ்சன் உள்ளிட்ட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர.



# கீரிமலை சிவபூமி அறநிதியம் அன்னதானமடம் அமைப்பு

(திருநெல்வேலி)

அகில இலங்கை இந்து மாமன்றம் கீரிமலை சிவபூமி அறநிதியத்தின் காணியில் பல மில்லியன் ரூபா செலவில் பத்துக் அறைகளுடன் கூடிய அன்னதான மடம் இணைந்த கட்டடமொன்றை நிர்மாணித்து வருகிறது என மன்றத்தின் பொதுச் செயலாளர் க.நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாக அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த இப பிரதேசத்தில் அமைந்துள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி நடந்தேறியது.

இந்து மாமன்றத்தினால் கட்டி முடிக்கப்படவிருக்கும் பத்து அறைகளில் ஒவ்வொன்றையும் கட்டி முடிப்பதற்கு பதினைந்து இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையுடன் இணைந்து இந்திய அரசு 360 மில்லியன் ரூபா செலவில் திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிமெந்துக் கலவையால் உருவாக்கப்பட்ட விநாயகர் சிலைகளை அகில இலங்கை இந்து மாமன்றம் இலவசமாக இந்து மன்றங்கள், நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவற்றுக்கு வழங்கவுள்ளது. (137)

## செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10, 11 இல் வணிகக்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாட அபிவிருத்திச் செயலமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இச்செயலமர்வில் வணிகப் போட்டிக்கான விடயத்தலைப்புக்கள் ஆக்க சாதனைகள் தயாரிக்கப்படவுள்ளதால் குறித்த பாடத்துடன் தொடர்புடைய ஆசிரியர்களை தவறாது பங்குபற்ற வழிப்படுத்துமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (44)

## இன்னிசை நிகழ்வு

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆலயப் பூசை நிறைவுற்றதும் பேரவையினால் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (116)

# முஸ்லிம் மாணவர்களின் கல்விக்கு உதவிகள் பெற்றுத்தரப்படும்

## மாநகர சபை உறுப்பினர் முஸ்தபா

(யாழ்ப்பாணம்)

புத்தளத்திலிருந்து யாழ். முஸ்லிம் பகுதிக்கு மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை உரிய வகையில் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகர சபை உறுப்பினர் எம்.எம்.முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அல்அஸ்ஷர் பாலர் பாடசாலைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழில் மீள்குடியேறிய மக்கள் புதிய சோனகத் தெருவில் கூடுதலாக வசிக்கின்றார்கள். இவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி அவசியமானதாகும். பாலர் பாடசாலையிலிருந்து பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தப் பெற்றோர்கள் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஊடாக சனசமூக நிலையம், பாலர் பாடசாலைகள் போன்றவற்றுக்கான நிதியுதவிகளைப் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் எம்.ஏ.நிலாம் அல் அஸ்ஷர் பாலா பாடசாலையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை உதவி மேயர் சட்டத்தரணி எம்ரமீஸ், சம்மேளன உறுப்பினர்களான எம்.ஏ.ஜி.மூபீன், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.ஏ.எம்.முபாரக் ஆகியோர் கலந்துகொண்டனர். (105)

# தம்புள்ளை பள்ளிவாசல் தாக்குதல்; யாழ்.மறைமாவட்டம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தம்புள்ளையில் அண்மையில் இடம்பெற்ற பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவத்தை யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ், முல்லை, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கும் யாழ்.மறைமாவட்டம் முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுநிலையினர் கழகத்தின் ஆண்டு மாநாட்டில் (29.04.2012) ஒன்று கூடியிருக்கும் 250 கத்தோலிக்கர்களாகிய நாம் அண்மையில் தம்புள்ளையில் முஸ்லிம் சகோதரர்களின் பழமை வாய்ந்த தொழுகைப் பள்ளிவாசல் வேறு மதத்தவரால் நடத்தப்பட்ட அடாவடித்தனத்தையும், அச்சுறுத்தல்களையும், அங்குள்ள பழைய இந்து ஆலயத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களையும் ஆழமாகக் கண்டிக்கிறோம். இவற்றுக்கு மத, அரசியல் தலைவர்களின் தூண்டுதலும் ஆதரவும் இருந்ததை அறிந்து வேதனைப்படுகின்றோம்.

எமது நாட்டில் இப்படியான இன, மத அடிபபடையிலான குரோதங்களையும், பிளவுகளையும், நீதிக்கு முரணான தீவிரவாதத்தையும் வேரோடு அறுத்தொழிக்க தீவிரமாக உழைக்க ஆட்சியாளர்களையும், சமயத் தலைவர்களையும், அமைதி சார்ந்த சமூகப் பெரியவர்களையும் வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீளாய்வுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மீள்குடியேற்றம் தொடாபாக விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரி.ஏ.மோகன்றாஸ், கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர்கள் மற்றும் சகல அரச திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (04)

# நிறுத்தல் அளவைக்கு முத்திரையிடும் பணிகள்

(யாழ்ப்பாணம்)

நிறுவைகள் 'அளவைகள்' கருவிகளுக்கு இன்று காலை 9 மணி முதல் 2 மணி வரை முத்திரையிடும் பணிகள் யாழ்.செயலகத்திலுள்ள நிறுத்தல் அளவைகள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருவிகளை யாழ்.செயலக நிறுத்தல் அளவைகள் அலுவலகத்திற்கு எடுத்துவந்து தமது கருவிகளுக்கு முத்திரையிடுமாறும் மற்றும் எலக்ரோனிக் கருவிகளுக்கும் அதனை மேற்கொள்ளுமாறு வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வீதியோரங்களில் நிறையும் குப்பைகள்

(குருநகர்)


யாழ்.காங்கேசன்துறை வீதியில் இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதியில் வீதியோரம் குப்பை கூழங்கள் போடப்பட்டு வருகிறது.

பொதிகளில் குப்பைகளைத் திணித்து ஒரேஇடத்தில் போடப்படுவதால் அப்பகுதியில் குப்பை மேடொன்று தோன்றியுள்ளது.

அதனில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் வீதியால் பயணிப்போர் மூக்கைப் பொத்திக் கொண்டு பயணிக்க நேர்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் இதனால் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (68)





வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட பௌர்ணமி விழா அண்மையில் பாலிநகர் மகா வித்தியாலய அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப் படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம்.

# மன உணர்வுகளை பிரதிபலிக்கும் சிறுகதைகள் வெளிவர வேண்டும்

## கவிஞர் சோ.பத்மநாதன்

(யாழ்.நிருபர்)

ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் மன உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் சிறுகதைகள் அமைய வேண்டும். அநாதரட்சகனின் சிறுகதைகள் எமது மண்வாசனையை எமது மக்களின் மனவலிமையைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன என பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் தெரிவித்தார்.

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அநாதரட்சகனின் "நிமிர்வு" சிறுகதைத் தொகுப்பு நூலில் நூல் அறிமுகவுரை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

சிறுக்தைகள் ஒரு பாத்திரத்தின் முக்கியமான கட்டத்தை வெளிப்படுத்துவனவாக அமையும். இவை ஒருவருடைய முழு வாழ்க்கையையும் சொலவதில்லை. சிறுகதையின் தொனிப் பொருளை அதை வாசிக்கும் வாசகன் கண்டுபிடிப்பான். ஒரு புதிய கோணத்தில் வாழ்க்கை பற்றிய தரிசனத்தைச் சிறுகதையில் காணமுடியும்.

சிறுகதையின் சிகரத்தைத் தொட்டவர் புதுமைப்பித்தன். அவர் கையாண்ட நடை தனித்துவமானது. பாத்திர அமைப்பு, சூழல் என்பவற்றுக்கு ஏற்றவாறு அவரது சிறுகதைநடை அமைந்திருக்கும்.

எழுத்தாளர் ஜெகநாதன் பல்வேறுபட்ட மொழி நடைகளை கையாண்டு சிறுகதை இலக்கியம் படைத்தவர். பிரமாணத்தமிழைச் சுத்தமாக எழுதுவார். பிரதேச வழக்கு, பாத்திரங்களின் மொழிநடை, பேச்சு வழக்கு என்பவற்றைச் சிறுகதை எழுத்தாளர்கள் கவனிக்க வேண்டும். தொடர்ந்து ஒரே நடையில் எழுதுவதை விட்டு பிரதேச மக்களின் வாழ்வியலை அவர்களது மொழி நடையில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்றார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை, யாழ்.கல்விவலய உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், நூல் ஆய்வுரையை யாழ்.கலை இலக்கிய பேரவை சார்பில் சட்டத்தரணி சோ.தேவராஜா மற்றும் கௌரி முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினார். (10)




**யாழ்.மாவட்ட அரசசார்பற்ற இணையப் பிரதிநிதிகளை அமெரிக்கப் புனர்வாழ்வு இணைப்பாளர் மற்றும் தூதரகப் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று முன்தினம் இணையப் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம். (137)**

# தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வவுனியாவில் 270 வீடுகள் அமைப்பு


(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் 270 வீடுகள் பரவலாக்கப்பட்ட வீட்டுத்திட்டமாக அமைக்கப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர் வி.கணேசநாதன் தெரிவித்தார்.

பரவலாக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தின் மூலம் வீடமைப்புக்கு தலா 2 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டு வருகின்றன. 'விருகம்ப' என்ற திட்டத்தின் மூலம் மடுக்கந்தையில் 100 வீடுகளும் வவுனியா வடக்கில் 100 வீடுகளும், வவுனியாவின் ஏனைய பிரதேசங்களில் 100 வீடுகளுமாக மொத்தம் 300 வீடுகள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவருகின்றன. வேறோர் திட்டத்தில் 100 வீடுகளும் "உபகார" என்ற திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு 334 வீடுகளும் "சுசினின்" என்ற திட்டத்தில் 16 வீடுகளும் ஓமந்தைப் பகுதியில் 200 வீடுகளும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் வீடமைப்புக்கு ஒதுக்கப்பட்ட 334 மில்லியன் ரூபாவில் 145 மில்லியன் ரூபா வவுனியா அரசாங்க அதிபரின் முயற்சியின் காரணமாக வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பரமர் சங்கமம்



**த**ம்புள்ளையில் முஸ்லிம் பள்ளி வாசலை அகற்றப் பிக்குமார் தலைமையில் சென்ற குழுவினர் மசூதியை இடித்தனர் என்ற செய்தி கடந்த வாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டது.

அதேவேளை திருகோணமலை பொது வைத்தியசாலை வளவுள் கடந்த அறுபது வருடங்கள் பழமை வாய்ந்த விநாயகர் ஆலயத்தை அகற்ற வேண்டுமென்ற குரலும் எழுந்தது.

இவ்விதம் கிறிஸ்தவ தேவாலயம் உடைக்கப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்து முடிந்தன. இவ்விடயங்கள் ஆக இலங்கையில் என்றில்லாமல் உலகின் பல பாகங்களலும் காலத்திற்கு காலம் நடைபெற்று வருகின்றமையும் ஊடகங்கள் மூலம் அறிந்து வருகின்றோம்.

மொழி, மதம் என்பனவும் மக்களுக்கான ஊடகங்கள் என்பதில் இருவேறு கருத்துக்கள் தோன்ற வாய்ப்பில்லை. மக்களின் சிந்தனைப் போக்குக்கு ஏற்றவாறு மதக்கோட்பாடுகளை அவர்கள் தெரிவுசெய்து கொள்ளலாம்.

மொழியை பிறப்பால் எந்த மொழி பேசுகின்ற குழுமத்தில் பிறக்கின்றாரோ அதனை வைத்தே தீர்மானிக்க முடிகிறது. மொழி, மதம், இனம் ஆகிய வேட்கையை மாக்ஸிசம் அபினி என வர்ணிக்கிறது.

அதாவது போதையை ஊட்டத்தக்க லாகிரித்தனமான உணர்வாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதனால் மனிதன் என்ற உணர்வை மறைத்து எந்தக் குழுமத்தைச் சேர்ந்ததோ அந்தக் குழும உணர்வில் உட்பட்டு செயற்படுகின்றான்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்பாய் சினிமா ரசிகர் குழுமத்துக்குள்ளும் இத்தகைய வீக்க தூக்கங்கள் தோன்றி எம்.ஜி.ஆர், சிவாஜி என்னும் கன்னைகளில் நின்று அடிபிடி சண்டை முற்றி வெட்டுக் கொத்துக்களால் உயிர்ப்பலி தோன்றிய பல சம்பவங்கள் நடந்தேறியதைப் பின்நோக்கிப் பார்த்தால் புரியும்.

அதுபோலவே கட்சி அரசியல் குழுமங்கள் குடையும் தத்தமது சார்பு நிலைக்கு எதிரானவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் பலர் கொல்லப்பட்டிருக்கின்ற வரலாறுகளைத் திருப்பிப்பார்த்தால் அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய ஆவேச உணர்வுகளை குறிப்பிட்ட மதங்களோ, மொழிகளோ போதித்து இனங்களிடையே பிளவுகளைத் தோற்றுவிக்கவில்லை என்பதை அறியலாம்.

மாறாக அவை மனிதர்களை சமூகத்தில் நல்லவர்களாக, வல்லவர்களாக சமாதானத்துடன் வாழத்தான் வழிகளைக் கூறி வந்துள்ளன; வருகின்றன.

நான்பிடித்த முயலுக்கு மூன்று கால் என்னும் மனோபக்குவத்துடன் அயலானை வக்கிரத்துடன் அணுகுவதாலே சமூகங்களிடையே பிளவுகளும், பேரழிவுகளும் ஏற்படுகின்றன என்பதை எப்போ உணரப்போகிறோம்?

அதிலும் மதத்தலைவர்களே துவேசங்களுக்குத் தூபமிடும் நிலைமை தோன்றுவது மனித சமுதாயத்தை முனனெடுத்துச் செல்ல உதவுமா செல்லுங்க பாப்பம்....?

# வேலணை கடற்தொழிலாளர்களுக்கு இதுவரை மானிய எரிபொருள் இல்லை

(வேலணை)

வேலணை பிரதேச கடற்தொழிலாளர்கள் கடற்தொழில் உபகரண விலையேற்றத்தினாலும், மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படாமையினாலும் வாழ்வாதார ரீதியில் கஷ்டநிலைக்கு உள்ளாகியுள்ளதாக வேலணை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சி.கார்த்திகேசு தெரிவித்துள்ளார்.

வேலணை சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களாக மண்டைதீவு, அல்லைப்பிட்டி, சாட்டி, துறையூர், அம்பிகைநகர், புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு மத்தி, புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு கலாஜோதி, நயினாதீவு வடக்கு, நயினாதீவு தெற்கு ஆகிய சங்கங்களை உள்ளடக்கிய 1724 அங்கத்தவர்களை கொண்டு வேலணை சமாசத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இத்தொழிலாளர்கள் மானிய விலையில் மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறாமல் பெரும் அசெகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதேவேளை யாழ்.மாவட்டத்தில் அனைத்துப்பகுதி கடற்தொழிலாளர் சங்கங்களுக்கும் இரண்டு, மூன்று கட்டங்களாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தீவுப்பகுதியில் இருக்கின்ற எந்தவொரு கடற்தொழிலாளர்களுக்கும் இதுவரை மண்ணெண்ணெய்க்குரிய முத்திரை வழங்கப்படவில்லை. இதற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (85)

# கணித பாட செயலமர்வு

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் நடந்து முடிந்த க.பொ.த (சா/த) பரீட்சை, கணிதபாட பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்படவுள்ளதுடன், இவ்வருடம் கணித பாடத்தில் அடைவு மட்டத்தினை உயர்த்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

இச் செயலமர்வில் குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி ட.மாலினி வனிற்றன் கேட்டுக் கொண்டுள்ளார். (42)

# முரசின் இன்றைய பலன்

(09.05.2012 -புதன்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 27 ஆம் திகதி. சதுர்த்தி பின்னிரவு 12.56 வரை.
நட்சத்திரம் மூலம், மரணயோகம் பின்னிரவு 12.40 வரை. சங்கடஹர சதுர்த்தி.
இராகுகாலம் 11.54 - 1.24 வரை. சுபநேரம 4.24 - 5.54 வரை.
எமகண்டம் 7.24 - 8.54 வரை. குளிகைகாலம் 10.24 - 11.54 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சந்திராட்டமம், கவனம் தேவை, சங்கடங்கள் தரும், குடும்ப உற்சாகம், பந்தயத்தில் வெற்றி. |
| ரிஷபம் | பயணம் தவிர்க்கவும், சுபச்செலவுகள், இடமாற்றம், உறவு நிலை சீராகும். |
| மிதுனம் | காரியானுகூலம், ஆடம்பரப்பொருள் சேரும், சமுதாயத்தில் மதிப்பு, செல்வம் வளரும். |
| கடகம் | கோபமிகுதி, எதிர்பாராத விரயங்கள், வீண் பிரச்சினைகள், சுபகாரியங்கள் நிறைவேறும். |
| சிம்மம் | புகழ் வந்து சேரும், பகட்டுவாழ்க்கை, போட்டி பொறாமை அகலும், காரியானுகூலம். |
| கன்னி | குடும்ப சுகம், சீரான உடல் ஆரோக்கியம், மங்களகரமான காரியங்கள், இடமாற்றம். |
| துலாம் | உடல்ஆரோக்கியம், பேச்சில்நிதானம்வேண்டும், கவனமாகச் செயற்படவும், மன உழைச்சல், |
| விருச்சிகம் | புகழாரங்கள், எதிர்பாராத பயணங்கள், குலதெய்வ வழிபாடு, சுமாரான பணவரவு. |
| தனுசு | பந்தயத்தில் வெற்றி, கொடுக்கல் வாங்கலில் கவனம், புத்திரரால்மகிழ்ச்சி, உடல்ஆரோக்கியம். |
| மகரம் | வாழ்வில் வெற்றி, தேவையற்ற அலைச்சல், குடும்பத்தில் ஒற்றுமை, வீண் வாக்குவாதம். |
| கும்பம் | அதிகாரிகளால் நன்மை, உறவினர்கள் ஆதரவு, முன்கோபத்தை குறைக்கவும், இடமாற்றங்கள். |
| மீனம் | பிற்பகல் நன்று, தொழில்வளம், ஆரோக்கியத்தில கவனம், நெருக்கமானவர்களை அனுசரிக்கவும். |



# ஹொக்கி வீராங்கனை மைதானத்தில் மரணம்

(சிட்னி)

ஹொக்கி அரங்கில் மிகப் பெரும் சோகம் ஒன்று நிகழ்ந்துள்ளது. உள்ளூர் போட்டியின் போது, பந்து தலையில் தாக்கியதில் அவுஸ்ரேலிய வீராங்கனை எலிசபெத் வாட்கின்ஸ் பரிதாபமாக மரணமடைந்தார்.

அவுஸ்ரேலியாவின் பெர்த் நகரை சேர்ந்தவர் எலிசபெத் வாட்கின்ஸ், (24-வயது). மாநில அளவிலான ஹொக்கிப் போட்டியில், மேற்கு அவுஸ்ரேலியாவின் நோர்த் ஷோஸ்ட்ரைடர்ஸ் கிளப் அணிக்காக விளையாடி வந்தார்.

விக்டோரியா பார்க் அணிக்கு எதிரான லீக் போட்டியில், தனது சகோதரி கேத்ரின் கரோலுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, வேகமாக வந்த பந்தை தடுக்க முயன்ற போது, அது எலிசபெத் வாட்கின்ஸ் தலையில் பலமாக தாக்கியது. உடனடியாக நினைவிழந்து கீழே விழுந்தார். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் மரணம் அடைந்தார். இந்த மரணம் குறித்து அவுஸ்ரேலிய ஹொக்கி சங்கம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இது போன்ற சம்பவங்கள் நடப்பது அரிதானது. இருப்பினும் இது போன்று எதிர்வரும் காலங்களில் நிகழ திருக்க நாம் அதற்கான வசதிகளை ஏற்படுத்துவோம். மரணமான குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஷரபோவா, வோஸ்னியாக்கி முதல் சுற்றில் வெற்றி

மட்ரிட் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் வோஸ்னியாக்கி, ஷரபோவா ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

மட்ரிட் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனை கரோ லின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) 7,6 (9,7), 3,6, 6,4 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் சேனியா பெர்வாக்கை போராடி வென்றார். மற்றொரு ஆட்டத்தில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6,0, 6,3 என்ற நேர் செட்களில் இரினா கேமலியாவை (ரோமானியா) எளிதில் வீழ்த்தினார்.

# அழகிகள் மூலம் ஆட்ட நிர்ணயச் சதி?

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள ருவென்ரி 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை சூதாட்ட தரகர்கள் விபசார அழகிகளை வைத்து பிக்சிங் (முன்கூட்டியே முடிவை நிர்ணயம் செய்தல்) செய்ய திட்டமிடப்பட்டு இருப்பதாக பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளது. சமீபத்தில் லண்டனில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று பொலிவுட் நடிகைகளை பயன்படுத்தி சூதாட்ட தரகர்கள் ஆட்டத்தை பிக்சிங் செய்வதாக கூறி இருந்தது. இதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஊழல் தடுப்பு பிரிவு விசாரணை நடத்தி வருகிறது. இதேபோல் டில்லி பொலிஸாரும் விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையே விபசார தரகருடன் விபசார அழகியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்த அழகி அப்போது கோகைன் என்னும் போதைப் பொருள் வைத்திருந்தார். டில்லியைச் சேர்ந்த சூதாட்ட தரகர்கள் விபசார அழகிகளை இலங்கைக்கு அனுப்பி 20 ஓவர் உலக கோப்பை போட்டியை பிக்சிங் செய்ய முயற்சிக்கும் பரபரப்பான தகவல் தெரிய வந்தது. கடந்த மார்ச் 31ஆம் திகதி விபசார புரோக்கர் 8 அழகிகளுடன் விமானத்தில் கொழும்பு செல்ல இருந்தார். கடைசி நேரத்தில் அந்த திட்டம் கைவிடப்பட்டது. விபசார அழகிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நாட்குறிப்பில் சூதாட்ட தரகர்களின் போன் நம்பர்கள் உள்ளன.

இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையே 20 ஓவர் உலக கோப்பை போட்டியை பிக்சிங் செய்வதற்காக இந்திய விபசார அழகிகள் இலங்கை வந்தார்களா? என்று இலங்கையில் விசாரணை நடந்து வருகிறது.

# மெய்வல்லுநர் அபிவிருத்திக்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்

(கொழும்பு)

சகல பேதங்களையும் மறந்து மெய்வல்லுநர் விளையாட்டின் அபிவிருத்திக்காக சகலரும் ஒன்றுபட வேண்டும். இவ் விளையாட்டுக்குக் கௌரவத்தைக் கொண்டு வர புதிய நிர்வாகிகள் பாடுபட வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்க நிர்வாகிகள் தெரிவின் பின்னர் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் புதிய நிர்வாகிகளை வாழ்த்தியும் உள்ளார். நாட்டின் அனைத்து பகுதி இளைஞர்களையும் விளையாட்டின் மூலம் ஒன்றுபடுத்துவதே எமது நோக்கம் அதற்கு உங்கள் ஒத்துழைப்பே மிக முக்கியமானது எனத் தெரிவித்தார்.

மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்கா போட்டியின்றி தலைவராகத் தெரிவானார். ஒலிம்பிக் பதக்கம் பெற்ற சுசந்திகா ஜயசிங்க உப தலைவர்களுள் ஒருவராகத் தெரிவானார். ரியல் அட்மிரல் சமோல் பெர்னாண்டோ செயலாளராகத் தெரிவானார். சந்தன ஏக்கநாயக்கா பொருளாளராகத் தெரிவாகியுள்ளார்.

# பாடசாலை மட்ட ருவென்ரி 20 தடைவிதிக்க கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை பாடசாலை கிரிக்கெட்டில் ருவென்ரி 20 போட்டிகளுக்குத் தடை விதிக்குமாறு இலங்கை விளையாட்டு மருத்துவப் பிரிவு கோரியுள்ளது.

ருவென்ரி- 20 போட்டிகள் கிரிக்கெட்டின் அடிப்படை ஆட்ட முறையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதனைத் தவிர்க்க பாடசாலை கிரிக்கெட்டில் இருந்து ருவென்ரி - 20 தவிர்க்கப்படவேண்டும் என இலங்கை விளையாட்டு மருத்துவப் பிரிவின் தலைவர் கலாநிதி அர்ஜுன டி சில்வா குறிப்பிட் டுள்ளார். பாடசாலை மட்டத்தில் வீரர்கள் ஆட்டமுறைக்கேற்ப நேர்த்தியாக விளையாடுவது கட்டாயம் எனவும் அவர் கூறினார்.

இதன்படி விளையாட்டு மருத்துவ பிரிவு, பாடசாலை ருவென்ரி-20 போட்டிக்குத் தடை விதிக்கும்படி கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சம்மேளனம் கடந்த ஆண்டில் 19 வயதுக்கு கீழானோருக்கான ருவென்ரி- 20 போட்டியை முதல்முறையாக நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். இறுதிப் போட்டி சென்னையில் இல்லை?

(சென்னை)

சென்னை-சேப்பாக்கம் மைதானத்தில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி வேறு மாநில மைதானத்திற்கு மாற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல்., ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகள் தற்போது நடக்கின்றன. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சென்னைக்கு, இம்முறை அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தொடக்க விழா, வை.எம்.சி.ஏ., மைதானத்தில் நடந்தது. தொடக்கப் போட்டி சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது. வரும் 25ஆம் திகதி பிளே-ஓப், அதைதொடர்ந்து 27ஆம் திகதி, இறுதிப்போட்டியும் சென்னையில் நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

சென்னை,சேப்பாக்கம் மைதானத்தில் 10 ஆயிரம் பேர் வரை அமர்ந்து பார்க்கும் வகையில் மூன்று பார்வையாயர் அரங்கு புதிதாக கட் டப்பட்டுள்ளன. இதில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட மூன்று வி.ஐ.பி., பொக்ஸ்களும் இடம்பெற்றுள்ளன. இந்த புதிய பார்வையாளர் அரங்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்(சி.எம்.டி.ஏ.) இன்னும் அனுமதி வழங்கவில்லை. இதனால், இந்த பார்வையாளர் அரங்கு பயன்படுத்த முடியாத நிலையுள்ளது.

மூன்று ஸ்டேண்டுகள் பூட்டி கிடப்பதால், ரசிகர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. இந்நிலையில், பிளே-ஆப் மற்றும் இறுதிப்போட்டியை காண்பதற்கு வெளிமாநிலங்களில் இருந்து முக்கிய பிரமுகர்களும், ரசிகர்களும் சென்னை வருவார்கள் என தெரிகிறது. மூன்று ஸ்டேண்டுகளை பயன்படுத்த முடியாததால் இட நெருக்கடி ஏற்படுவதுடன், ஐ.பி.எல்., அமைப்புக்கு வருமானமும் குறையவாய்ப்புள்ளது. சென்னை அணியும், அதிக தோல்விகளை சந்தித்து வருவதால், பிளே-ஆப் மற்றும் இறுதிப் போட்டிக்கு தகுதிபெறுமா என்பதில் குழப்பம் நீடிக்கிறது. ஐ.பி.எல்., போட்டியை பொறுத்தவரை, வழக்கமாக உள்ளூர் அணி பங்குபெறும் போட்டியை காண மட்டுமே ரசிகர்கள் ஆர்வம் காட்டுவார்கள் என்பதால், சென்னையை அணியை தவிர்த்து மற்ற அணிகள் பிளே-ஆப் மற்றும் இறுதிபோட்டியில் மோதினால் ரசிகர்கள் எண்ணிக்கையும் குறையவாய்ப்புள்ளது. மேலும், தமிழகத்தின் முக்கியப்புள்ளியை,இறுதிப்போட்டி பரிசளிப்பு விழாவிற்கு அழைத்துவர எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததாக கூறப்படுகிறது.

# தொடர்ந்தும் முதலிடம்

ரென்னிஸ் வீரர்களுக்கான ஏ.ரி.பி நிரல்படுத்தலில் 12,020 புள்ளிகளுடன் சேர்பியாவின் ஜெகோவிச் தொடர்ந்தும் முதல் இடத்தில் நீடிக்கிறார்.

இறுதியாக வெளியிடப்பட்ட புதிய நிரல்படுத்தலுக்கு அமைய முதல் 20 இடங்களில் எந்தவொரு மாற்றங்களும் ஏற்படவில்லை.

ஸ்பெயினின் ரபெல் நடால் இரண்டாம் இடத்தில் உள்ளதுடன், ரொஜர் பெடரர் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

அன்டி மரே, ஜோ வில்பிரட் சொங்கா, டேவிட் பெரடர், தோம்ஸ் பேடிஸ் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.



# எதிரணியில் விளையாடும்போது நண்பர்களுக்கு நெருக்கடி

(கொல்கத்தா)

சேவாக்கும் நானும் சிறந்த நண்பர்கள். போட்டி என்ற ரீதியில் இருவரும் எதிரணியில் விளையாடுவது மிகுந்த நெருக்கடி நிறைந்தது என கொல்கத்தா அணியின் கப்டன் கம்பீர் தெரிவித்தார்.டில்லி அணியுடனான வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுழற்பந்து வீச்சாளர்களின் பணி சிறப்பாக இருந்தது. சுனில் நரைன் மிகவும் சிறப்பாக பந்துவீசி வருவது பாராட்டத்தக்கது. சேவாக்கும், நானும் மிகச் சிறந்த நண்பர்கள். எங்கள் இருவருக்கும் நல்ல உறவு இருக்கிறது. ஐ.பி.எல். போட்டி என்பதால் இருவரும் வேறுவேறு அணியில் உள்ளோம். நான் எப்போதுமே அவரது ஆட்டத்தை ரசிப்பேன். அவரை நான் மிகவும் மதிக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

தோல்வி குறித்து டெல்லி டேர்டெவில்ஸ் கப்டன் சேவாக் குறிப்பிடுகையில்,

நாங்கள் 20 முதல் 25 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்துவிட்டோம். நடுவரிசை ஓவரில் எங்கள் அணி ஆதிக்கம் செலுத்த தவறிவிட்டது. கொல்கத்தா வீரர் சுனில் நரைன் மிகவும் சிறப்பாகப் பந்து வீசினார். 153 ஓட்டங்கள் என்பது நல்ல ஸ்கோர்தான். எங்களது களத்தடுப்பும், பந்துவீச்சும் மோசமாக இருந்தது. இதுவே தோல்விக்கு காரணம். சுழற்பந்து வீரர் நதீமை சேர்த்தது சரியான முடிவுதான். கம்பீர் வேகப்பந்தை சிறப்பாக ஆடுவார் என்பதால் தேர்வு செய்யப்பட்டார் எனத் தெரிவித்தார்.

# தலைமைப் பண்புடன் பிறந்தவர் கம்பீர் என்கிறார் பிரெட்லீ

கப்டனுக்குரிய தலைமைப் பண்புடன் பிறந்தவர் கௌதம் கம்பீர் என்று அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ புகழாரம் சூட்டியுள்ளார். கப்டனுக்கு வேண்டிய அனைத்துத் தகுதிகளும், திறமைகளும் கம்பீரிடம் உள்ளது. அணியைச் சிறப்பாக வழி நடத்திச் செல்வது மட்டுமின்றி, தனிப்பட்ட முறையிலும் அவர் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறார். தலைமை ஏற்பதற்குரிய அனைத்துப் பண்புகளுடன் அவர் பிறந்திருக்கிறார் என்று தான் கூற வேண்டும்.

நீண்ட நாட்களுக்குப் பின் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் அவுஸ்ரேலிய அணி மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதற்கு கப்டன் கிளார்க்கின் முயற்சிகளும் முக்கியக் காரணம். அவரது தலைமையில் அவுஸ்ரேலிய அணி வலுவாக உள்ளது.சமீபத்தில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி சிறப்பாக விளையாடி தொடரை வென்றது. விரைவில் டெஸ்ட் தரவரிசையிலும் அவுஸ்ரேலியா முதலிடத்தைப் பிடிக்கும்.முன்னாள் கப்டன் பொண்டிங் கிரிக்கெட்டில் மேதை. ஓய்வு சரியான தருணம் எது என்பது அவருக்கே தெரியும். மற்றவர்கள் அதைப் பற்றி அதிகம் பேசுவது தேவையில்லை என்றார்.



ரிக்கி பெற

# மூன்றாம் இடம் பிடித்தது வட்டு. ஓல்ட்கோல்ட்ஸ் அணி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து நடத்திய ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் 3ஆம் இடத்தை வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கடுமையாக மோதின. ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் 3 கோல்களைப் பெற்றது. ஆட்ட நிறைவில் ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 4 - 0 என்ற கோல் கணக்கில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி விரைவில் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து யாழ். ஸ்ரார் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# ஆண்களுக்கான எல்லே யாழ். பல்கலை வெற்றி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தேசிய இளைஞர் சங்க விளையாட்டுக் கழகம் பிரதேச செயலக சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் பல்கலைக்கழக தேசிய இளைஞர் மன்ற விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் தேசிய இளைஞர் மன்ற விளையாட்டுக்கழகமும் மோதின. 40 பந்துகளுக்கு மட்டுப்படுத்திய போட்டியாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 02 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

03 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி விளையாடிய பல்கலைக்கழக அணி 24 பந்துகளில் 06 பேர் ஆட்டமிழந்த நிலையில் 03 ஓட்டங்களைப் பெற்று நல்லூர் பிரதேச செயலக தேசிய இளைஞர் கழகத்தின் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

## சிறப்புற நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி 7ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. சண்முகராசா தலைமையில் சிறப்பு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), சி. புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. ரகுநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். மாவட்ட கிரிக்கெட் ஜொனியன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற 30 ஓவர்கள் கொண்ட போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை யூனியன்ஸ் அணி 30 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களை பெற்றது.

இதில் ஜான்சன் 7 நான்குகள், 2 ஆறு ஓட்டங்கள் உள்ளடங்களாக 69 புள்ளிகளையும் யுவராஜ் 38, சதீஸ்கண்ணா 30, பிரசாந்தன் 26, வைகுந்தன் 21 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன. பந்து வீச்சில் லவேந்திரா விதுசன் முறையே தலா 6 ஓவர்கள் பந்து வீசி முறையே 44 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களையும் அகிலன் காண்டீபன் தலா 6 ஓவர்கள் பந்து வீசி முறையே 23, 44 ஓட்டங்களை கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

207 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 23 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ரஜீந்திரன் 54, காண்டீபன் 41, குமணன், கஜீவன் தலா 34 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன. பந்து வீச்சில் டக்சயன் 5 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுகிர்தன், வைகுந்தன், யுவராஜ் முறையே 14, 15, 26, ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

## ஆண்டு விழாவை முன்னிட்டு கிரிக்கெட், கரப்பந்தாட்டம்

(கைதடி)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சிக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் மற்றும் செற்றப் முறையிலான கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் வளர்மதி விளையாட்டுக்கழக செயலாளருடன் தபால் மூலமோ நேரிலோ தொடர்புகொண்டு நாளைய தினத்திற்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (11)

# முல்லை வலய பாடசாலைகளின் கால்பந்தாட்டப் போட்டி இன்று

(முல்லைத்தீவு)

துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களை உள்ளடக்கிய முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளின் பெருவிளையாட்டுக்களின் வரிசையில் இன்று புதன்கிழமை கால்பந்தாட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்திலும், 15 வயதுப் பிரிவு ஆண்கள் மற்றும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டி மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

இதன்படி ஒவ்வொரு பிரிவிலும் மோதும் அணிகளின் விபரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு ஆண்கள்:**

முதலாவது போட்டி - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலை, இரண்டாவது போட்டி - வித்தியானந்தாக் கல்லூரி எதிர் முத்தையன்கட்டு வலது கரை அ.த.க. பாடசாலை, மூன்றாவது போட்டி - யோகபுரம் மகாவித்தியாலயம் எதிர் 1ஆவது போட்டியில் வெற்றிபெறும் அணி, நான்காவது போட்டி - உடைப்புக்குளம் தமிழ் வித்தியாலயம் எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இடம்பெறும்.

**17 வயதுப் பிரிவு ஆண்கள்:**

முதலாவது போட்டி - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு மகாவித்தியாலயம், இரண்டாவது போட்டி - பாலிநகர் மகாவித்தியாலயம் எதிர் வித்தியானந்தாக் கல்லூரி. மூன்றாவது போட்டி உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம் எதிர் 1ஆவது போட்டியில் வெற்றி பெறும் அணி, நான்காவது போட்டி - மல்லாவி மத்திய கல்லூரி எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

**19 வயதுப் பிரிவு ஆண்கள்:**

முதலாவது போட்டி - செம்மலை மகாவித்தியாலயம் எதிர் கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலை, இரண்டாவது போட்டி - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மூன்றாவது போட்டி கற்சிலைமடு அ.த.க. பாடசாலை எதிர் முதலாவது போட்டியில் வெற்றிபெறும் அணி, நான்காவது போட்டி - பாரதி வித்தியாலயம் எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி. தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

**19 வயதுப் பிரிவு பெண்கள்**

முதலாவது போட்டி : பாலிநகர் மகாவித்தியாலயம் எதிர் வித்தியானந்தாக் கல்லூரி, இரண்டாவது போட்டி - முத்தையன்கட்டு (வலது கரை) அ.த.க. பாடசாலை எதிர் உடையார்கட்டு மகாவித்தியாலயம், மூன்றாவது போட்டி - செம்மலை மகாவித்தியாலயம் எதிர் 1ஆவது போட்டியில் வெற்றிபெறும் அணி, நான்காவது போட்டி கற்சிலைமடு அ.த.க. பாடசாலை எதிர் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் அணி, தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறும். (42)

# அலெக்ஸன் வெற்றிக் கிண்ணம் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி



(கைதடி)

நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண ரீதியாக நடைபெற்ற அமரர் அலெக்ஸன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின.


5 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் 3 : 2 என்ற கணக்கில் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அலெக்ஸன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.


**யாழ்ப்பாணத்தை எரித்துக் களித்தவர்களும் யாழ்ப்பாணத்தை எரித்துவிட்டார்கள் என்று குற்றம் சாட்டியவர்களும் எப்போது எப்படி இணங்கினர் என்று கேட்கப்படும் கேள்வியும் ஒரு பக்கத்தில் கொதிநிலையிலேயே உள்ளது.**



- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

# எங்கிருந்தோ இங்கே நகர்த்தப்படும் காய்கள்





இலங்கையில் இப்போது அரசியற் காரணங்களுக்காகச் சிறையிருக்கும் தலைவர் ஒரு சிங்களவரே. பிரிவினைவாதத்தைப் பற்றி, புலிகளைப் பற்றி அதிகமாகக் கதைக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட அச்சமின்றி, மிகப் பகிரங்க மாகத் திரிகிறார்கள். புலிகளின் முக்கியஸ்தர்களாகவும் புலிகளின் சிரேஷ்ட மட்டத் தலைவர்களாகவும் இருந்தவர்கள் கூட இன்று மிகப் பாதுகாப்பாக - வெளியே நடமாடுகிறார்கள். ஆனால், நாட்டுக்காக மரணத்தின் விளிம்புவரை சென்று திரும்பிய சரத்பொன்சேகா சிறைக் கம்பிகளினுள்ளே நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலின்போது கூட்டு வைத்துக் கொண்டவர்கள் கூட அவரைச்சென்று பார்க்கவில்லை. அவரைக் களமிறக்கியவர்களும் அவரை ஆதரித்தவர்களும் இன்று அவரைக் கைவிட்டுள்ளனர் என்றே தெரிகிறது. அல்லது அவர்கள் சரத்தை மீட்கமுடியாத நிலையில் வேறு தெரிவுகளுக்குச் சென்றுள்ள்னர்.

சரத் எப்படியான சூழலில் களமிறங்கினார் என்று பார்ப்பதற்கு முன்னர், அவரை யார் களமிறக்கினார்கள்? எப்படிக் களமிறக்கப்பட்டார்? என்று பார்ப்பது இன்றைய அரசிற் சூழலை விளங்கிக் கொள்ள இலகுவாக இருக்கும்.

சரத்தைக் களமிறக்கியது அமெரிக்கா தலைமையிலான மேற்கே. இலங்கையில் தமக்குச் சாதகமான தலைமைகளைத் தேடிக் கொண்டிருக்கிறது மேற்கு. அதற்குத் தோதாக யாரும் இல்லை என்ற நிலையில் சரத் பொன்சேகாவை அது தேர்ந்தெடுத்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்தத் தெரிவைச் செய்ய வேண்டிய அவசியம் மேற்கிற்கிருந்தது. மகிந்த ராஜபக்ஷ மேற்கின் ஆளில்லைஎன்று அதற்குத் தெளிவாகவே தெரியும். எனவே அது வேறு ஒருவரை அல்லது மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கக் கூடிய - அவரை மேவக் கூடிய ஒருவரைத் தேடியது.

வழமையைப் போல ஐ.தே.க மேற்குக்குக் கை கொடுக்கும் இயல்போடிருந்தது என்றாலும் அதன் தலைமை அதற்குரிய ஆளுமை-யோடு இல்லை என்பதால் சரத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன்படி அது முதலில் சரத்தை ஒரு பொது வேட்பாளராக்கியது. இந்தப் பொது வேட்பாளரை ஐ.தே.கவும் ஆதரிக்கும். சிறுபான்மைத் தரப்புகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரிக்கும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஆதரிக்கும். மனோ கணேசனும் ஆதரிப்பார்என்று ஒரு தோற்றத்தை அது ஏற்படுத்தியது. அதாவது சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைவர் - ஒரு பொது ஆள் என்ற தோற்றத்தையும் உணர்வையும் நாட்டு மக்களிடையே ஏற்படுத்துவதே இதன் நோக்கம்.

இந்தச் சூழலுக்காக மேற்கு குறிப்பாக அமெரிக்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்புக்கும் பல தடவைகள் பயணம் செய்திருந்தார்கள். அங்கெல்லாம் பொதுமக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுவோரைச் சந்தித்தார்கள். மதகுருக்களைச் சந்தித்தனர். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் கூடச் சந்தித்தனர்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், யாழ்ப்பாணத்தில் முதன்மைப் பத்திரிகையாகத் தோற்றம் காட்டும் உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தையும் கொழும்பில் தினக்குரல், வீரகேசரி போன்றவற்றின் பிற ஊடகவியலாளர்களையும் அமெரிக்கப் பிரதிநிதிகள் முக்கியத்துவம் கொடுத்துச் சந்தித்தனர். மேலும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் எழுதும் ஊடகவியலாளர்களையும் மேற்கின் ராஜதந்திரிகள் தொடர்ந்து சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

இதற்கெல்லாம் காரணம், தமக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்குவதே.அதன் படியே பிறகு அனைத்துத் தரப்பும் சரத்தை ஒருமித்த குரலில் வாய்ப்பாடாக ஆதரித்துக் "கோரஸ்" பாடின.

ஆனாலும் சரத்தினால்கோல்போட முடியவில்லை. அவர் போரில் பெற்ற வெற்றியையும் பறித்துக் கொண்டதாகவே அவருடைய அரசியல் பிரவேசம் அமைந்தது.

மேற்கின் நம்பிக்கை நட்சத்திரம் அப்படியே ஒளிர முடியா-மற் தணிந்தடங்கி விட்டது. சரத்தின் தோல்விக்குப் பிறகு வேறு தெரிவுகள் எதுவும் மேற்கிற்குச் சுலப-மாகக் கிடைக்கவில்லை.

ஐ.தே.கவிற்குள் தேடினால், ரணிலுக்கு அடுத்தபடியாக கரு ஜெயசூரியா. ஆனால் அவர் ஒரு சிரேஷ்ட உறுப்பினராக இருந்தாலும் காரியசித்தராக இல்லை. அடுத்த நிலையில் தெரிந்தவர் சஜித் பிரேமதாஸ.ஆனால், அவரும் மேற்கிற்குக் கவர்ச்சியை ஏற்படுத்தத் தக்க அளவில் செழிப்பான அடையாளங்களை வெளிப்படுத்தவில்லை. பதிலாக இன்னும் கட்சியையும் தன்னையும் பலவீனப் படுத்திக் கொண்டேயிருக்கிறார் சஜித்.

இந்த நிலையிற்தான் மேற்கு வேறு வழியின்றி மீண்டும் ரணிலை முன்னரங்குக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது. அதன்படியே ரணிலை அது பொது ஆளாக்குகிறது.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை மீண்டும் உருவாக்க முனைகிறது. இந்தக் கூட்டமைப்பில் அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களும் அதிருப்தியாளர்களும் ஒன்றிணைவதற்கான ஏது நிலைகளையும் அது உருவாக்கி வருகிறது. இதற்காக அமெரிக்கப் பிரதிநிதிகள் தொடர்ந்து பல சந்திப்புகளைப் பல தரப்பினருடனும் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் பிரதிநிதிகளுடனும் ஆயருடனும் நடக்கின்ற சந்திப்புகள் கூட இந்தப் பின்னணியைப் பெரிதும் கொண்டவையே. மேலும் அங்குள்ள பத்திரிகைகளையும். சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும். இதற்காக அது சில தரப்புகளுக்கு அள்ளியிறைக்கும் தொகையும் வழங்கும் சலுகைகளும் கொஞ்சமல்ல.

இப்போது இவ்வாறு உருவாக்கப்படும் பொது ஆளான ரணில் யாழ்ப்பாணம் வரையில் வந்து அரசியல் விவகாரங்களில் ஈடுபடுகிறார். அண்மையில் நடந்த மேதின நிகழ்வு இதற்கொரு உதாரணம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக ரணிலுடன் கைகுலுக்குவதை அதிகம் விரும்பவில்லை என்றாலும் மேற்கின் விருப்பத்தை அதனால் மீறிட முடியவில்லை. எனவே அது நசிந்த நிலையில் மெல்லக் கையை நீட்டியுள்ளது. (யாழ்ப்பாணத்தை எரித்துக் களித்தவர்களும் யாழ்ப்பாணத்தை எரித்துவிட்டார்கள் என்று குற்றம் சாட்டியவர்களும் எப்போது எப்படி இணங்கினர் என்று கேட்கப்படும் கேள்வியும் ஒரு பக்கத்தில் கொதி நிலையிலேயே உள்ளது).

மட்டுமல்ல, சம்பந்தன் இலங்கையின் தேசியக் கொடியை ஏந்தியதும் (அதுவும் யாழ்ப்பாணத்தில்) மேற்கின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டதே. (இந்த இடத்தில் யாழ்ப்பாணம் ஆயர் வாய் திறக்காமல் கள்ள மௌனம் காப்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில் அவர் மேற்கின் விருப்பங்களுக்கு மாறாகச் சிந்திக்கமாட்டார். அப்படிச் சிந்தித்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்).

ஆனால், எப்படியோ ரணில் இலங்கைத் தீவின் பல சமூகத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட - அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொது ஆளாகத் தோற்றம் கொள்ள வைக்கப்படுகிறார்.

இந்த நிலையில் "இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இத்தகைய ஒரு பொதுத்தோற்றம் தேவை. பலருடைய ஒன்றிணைவுடன் வரும் ஒருவரே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நிலையைக் கொண்டிருக்க முடியும்" என்று இதனை அவதானிக்கும் சிலர் வாதிடுகிறார்கள். மட்டுமல்ல "ஜனநாயகத்தின் பேணுகைக்கும் இது அவசியம்" என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

"இல்லை. இது வெறும் தோற்றம் மட்டுமே தவிர, அதற்கப்பால் ஒன்றுமேயில்லை. எல்லாமே வழமைதான். தங்களுடைய நலன்களுக்காக எங்களின் கண்களில் மண்ணைத் தூவி மூளையைக் கறுப்பாக்க முயற்சிக்கிறார்கள். மேதின நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் ரணில் என்ன சொன்னார் தெரியுமா? "நாங்கள் யுத்தம் செய்யாமல் யாழ்ப்பாணம் வந்திருக்கிறோம். இப்போது யாழ்ப்பாணத்திலும் நாங்கள்" என்கிறார். இது எதைக் காட்டுகிறது? தான் போர்க்குற்றங்களுக்கு அப்பாலானவன், இரத்தக்கறை படியாதவன் என்று சொல்லப் பார்க்கிறார். ஆனால், அவர் தீர்வைக் குறித்து என்ன சொல்கிறார்?" என்று கேட்கின்றனர் மறுப்பாளர்கள்.

"ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு இதை விட வேறு என்ன மார்க்கம் இருக்கிறது?" என்று கேட்கிறார்கள் முதற் தரப்பினர்.

"இல்லை இது மேற்கின் சூழ்ச்சி, மேற்கு தொடர்ந்து கொண்டிருக்கிற இன்னொரு வடிவத்திலான ஆக்கிரமிப்பு முயற்சி. இதெல்லாம் அதனுடைய பொறியே தவிர, இலங்கையின் நிரந்தர அமைதி, சமாதானம், இன நல்லிணக்கம், அரசியற் தீர்வு என்ற எதுவும் இந்த நடவடிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. இலங்கை மக்களுக்கோ இலங்கையிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கோ இதில் எந்த நன்மைகளும்பெரிதாகஇல்லை" என்கின்றனர் மறுப்பாளர்கள். அதாவது ரணில் இந்தநாட்டுக்காகஅல்ல, வெளித்தரப்புக்காகக் கோல் போடுவதற்காகவே தயாரிக் கப்படுகிறார்.

இப்படியே "இரு நிலை விவாதம்" இன்றைய இலங்கை நிலைமை குறித்து பொதுவாகப்பேசப்படுகிறது.

இந்த நிலையில் மேற்கின் பந்தயக் குதிரையாக ஆக்கப்பட்ட சரத்தைப் போல ரணிலும் பொறியொன்றினுள் சிக்கிக் கொள்வாரா? அல்லது வெற்றிக் கொடியோடு சிம்மாசனம் ஏறுவாரா? இது ஒரு பொல்லாத - கடினமான கேள்வியும் எதிர்பார்க்கையுமாகும்.

எப்படியோ இன்று தமிழ் அரசியற் தலைவர்களையும் விட சிங்கள அரசியற் தலைவர்களே அதிகநெருக்கடிகளைச் சந்திக்கிறார்கள். தமிழ் அரசியற்தலைவர் எவரும் நாடு கடத்தப்படவோ சிறையில் அடைக்கப்படவோ இல்லை. பதிலாக சிங்கள அரசியற் தலைவர்களே அப்படியான நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

அண்மையில் ஜே.வி.பியின் உறுப்பினர்களான லலித், குகன் காணாமற்போனமை மற்றும் ஜே.வி.பியின் மாற்றுஅணியின் பிரமுகர்கள் பிரேம்குமார் குணரட்ணம், திமுது ஆட்டிக்கல போன்றோர் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டமை எல்லாம் இங்கேகவனத்திற்குரியது. இதைத்தவிரஅனைத்துப் பல்கலைக்கழங்களின் தலைவர் உதுல் பிரமரத்தினவின் கைது.

எனவே அரசாங்கம் தமிழ்த் தலைமைகளையும் விட சிங்களத்தலைமைகளைக் குறித்தே அதிகம் அச்சமடைகிறது. மடியிற் கனமிருந்தால் வழியிற் பயம் என்று சொல்வார்கள். அரசாங்கத்தின் மடியிற் கனமிருக்கும் வரையில் அது இந்த வழிப்பயத்தை விட்டொழிக்கவே முடியாது.

இதற்கெல்லாம் காரணம்இலங்கைத் தீவில் ஜனநாயகத்தைத் தின்று தீர்த்தவர்களும் அதற்கு ஆதரவாக இருந்தவர்களுமே. இதை மாற்றியமைப்பதற்கு இன்று ஒரு ஒப்பற்ற ஜனநாயக ஆளுமை - தன்னை ஒப்புக்கொடுத்துச் செயலாற்ற வல்ல, வரலாற்றை நகர்த்தக்கூடிய ஆற்றல் பொருந்திய தலைமை வேண்டும்.

ஜனநாயகத்தை இலங்கையில் மீளுருவாக்கம் செய்கிறோம் என்ற போர்வையில் வெளிச் சக்திகள் தங்களுக்கான வேர்களை இங்கே பதியம் வைக்க முயற்சிக்கின்றன. இதை அங்கீகரிப்பதைத் தவிர வேறு கதியில்லை என மக்களிற் பெரும்பாலானோர் கருதுகின்றனர். இதுதான் இன்றைய உலகத்தின் புதிய போக்காக வளர்ந்து வருகிறது.

# சீன நட்புறவை துண்டித்து அமெரிக்காவுடன் நெருக்கம்

## அரசு மீது குற்றச்சாட்டு



(கொழும்பு)

அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்தும் வகையில் சீனாவுடனான நட்புறவை அரசாங்கம் விலக்கி வருவதாக தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளதாவது,

இந்தியா மற்றும் அமெரிக்கா விரித்த வலையில் அரசாங்கம் சிக்கிக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள சூழ்நிலையில், இலங்கையிலிருந்தும் தூதுக்குழுவொன்று இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொள்கிறது.

இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சீன நட்புறவுக் கொள்கையிலிருந்து முழுமையாக பிரித்தெடுக்கும் படலம் முற்றுப்பெறவுள்ளது.

ஏற்கனவே சீனாவுடனான நட்புறவிலிருந்து அரசாங்கம் மெது மெதுவாக விலகி வருகிறது.

இதன் பின்னர் நிச்சயமாக அமெரிக்காவின் இராணுவ முகாம் இலங்கையில் ஸ்தாபிக்கப்படும்.

இதன் பின்னர் சரத் பொன்சேகா விடுதலைக்கான காய் நகர்த்தல்களை அமெரிக்கா மேற்கொள்வதோடு அதற்கான பாரிய அழுத்தத்தை ஜனாதிபதி மீது பிரயோகிக்கப்படும்.

சிங்கள, பௌத்தர் என்ற முத்திரையின் கீழ் சரத் பொன்சேகாவை விடுவித்து அதன் பின்னர் பொன்சேகாவை ஆட்சிக்கு கொண்டு வந்து வடக்கு, கிழக்கில் தமிழ்மக்களை ஒழிக்கும் செயற்பாடுகளை நிறைவேற்றி அதனை இனச் சங்காரம் எனக் காரணம் காட்டி இலங்கையை அமெரிக்கா இரண்டாகப் பிரிக்கும்.

அச்சதித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை இந்தியாவுடன் மேற்கொள்ளவே ஹிலாரி கிளிண்டன் புதுடில்லி சென்றுள்ளாரென்றும் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

# தெரிவுக்குழு பணிகள் ஆரம்பமாக எதிர்க்கட்சிகள் இடம்பெறவேண்டும்

## என்கிறார் அமைச்சர் நிமால்



(கொழும்பு)

எதிர்க்கட்சியினர் தமது பிரதிநிதிகளை நியமித்ததின் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

துரித கதியில் எதிர்க்கட்சிகள் பிரதிநிதிகளை பெயரிட்டால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பில் ஜே.வி.பி. இன்னமும் தீர்மானிக்கவில்லை. தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பங்கேற்கச் செய்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, அரசாங்கம் மெய்யாகவே தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க ஆர்வம் காட்டுகின்றதா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# இந்தோனேஷிய சிவப்பு பட்டியல் நீக்கப்படுகிறது இலங்கை

(கொழும்பு)

இந்தோனேஷியாவின் குடிவரவு சிவப்புப் பட்டியலிலிருந்து இலங்கையையும் பங்களாதேஷையும் மே மாத இறுதியில் நீக்குவதற்கு இந்தோனேஷிய சட்ட மற்றும் மனித உரிமைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் திட்டமிடப்பட்டதைவிட நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே மேற்படி பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, பங்ளாதேஷ் நாடுகள் இப்பட்டியலில் இருந்து விரைவில் நீக்கப்படும். இந்நாடுகளின் பொருளாதார, பாதுகாப்பு விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் இலங்கை, பங்களாதேஷ் பிரஜைகள் இந்தோனேஷியாவுக்கு வருவதற்கான வீசா கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என மேற்படி அமைச்சின் பயண ஆவணத் துறை தலைவரான பதி சத்ரியா விபாவா கூறியுள்ளார்.

பங்களாதேஷ் பிரஜைகள் தெளிவான நோக்கமின்றி இங்கு வருவதற்குப் பதிலாக இந்தோனேஷியாவுக்கு நன்மைகளைக் கொண்டு வருவார்கள் என நம்பப்படுகிறது எனவும் விபாபா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகள் இப்பட்டியலில் தொடர்ந்தும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆளும் கட்சி எம்.பி.க்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள்?

(கொழும்பு)

ஆளும் கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்கள், மாகாணசபைகளில் முன்னர் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள், சிறிய கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இவ்வாறு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளன.

மாவட்ட ரீதியில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுமா என எழுத்து மூலம் ஜனாதிபதியிடம் கோரியிருந்தனர்.

எதிர்வரும் வாரங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திகாம்பரம், பிரபா கணேசன், சனத் ஜயசூரிய, நிசாந்த முத்துஹெட்டிகம, சரத் வீரசேகர, ஹேமல் குணசேகர உள்ளிட்ட சிலருக்கே பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய முதலமைச்சர்களுக்கு தேசிய நல்லிணக்க விளக்கம்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கம் தொடர்பில் இந்திய முதலமைச்சர்களுக்கு அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்தியாவின் அனைத்து மாநிலங்களினதும் முதலமைச்சர்களுக்கு தேசிய நலலிணக்கம் தொடர்பில் விளக்கமளித்துள்ளார். எழுத்து மூலம் இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் போரின் பின்னரான அபிவிருத்திப் பணிகள் என்பன தொடர்பில் முதலமைச்சர்கள் திருப்தி அடைவார்கள் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் நல்லிணக்கம் தொடர்பில் விளக்கமளித்து அமைச்சர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்..

# பரிந்துரைகளை அமுல்படுத்த உறுதியாகவுள்ளது அரசாங்கம்



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

இதனை அமுல்படுத்துவது தொடர்பில் திட்டவரைபொன்றை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


குறுகியகாலம், இடைக்காலம், நீண்டகாலம் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான திட்டவரைபு தயாரிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில், ஜனாதிபதி செயலகம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்று சட்டமா அதிபர் திணைக் களத்துடன் இணைந்து வெளி விவகார அமைச்சு இத்திட்ட வரைபைத் தயாரிக்கும் பணி களை ஆரம்பித்திருப்பதாகவும் பிரதியமைச்சர் கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல படுத்துவது என்ற நிலைப்பாட்டில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால், அதனை அமுல்படுத்துவதற்கான திட்டவரைபு தயாரிக்கும் பணிகளிலேயே அரசாங்கம் தற்போது கவனம் செலுத்தியிருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

# மேர்வினுக்கு எதிரான விசாரணை சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)



அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக ஊழல் மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவிடம் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து, விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து சட்ட ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் அறிக்கைக்கு அமையவே, அமைச்சருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளவது குறித்து ஆணைக்குழு தீர்மானிக்கும் என அதன் தலைவர் டி.ஜே.டி. எஸ்.பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும், அமைச்சருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில், அந்த விசாரணைகள் ரகசியமான முறையிலேயே மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் இரகசியத் தன்மைக்கு அமைய விசாரணைகள் முடியும் வரை, விசாரணை குறித்த விபரங்கள் பொது மக்களுக்கு வெளியிடப்படமாட்டாது எனவும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# திடீரென வீசிய மினிச் சூறாவளி; 80 குடும்பங்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஊற்றுச்சேனை, மற்றும் வடமுனை ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினிச் சூறாவளியினால் அக்கிராமங்களில் மக்கள் குடியிருந்த தற்காலிக குடிசைகள் சேதமடைந்துள்ளதுடன், அக்கிரமங்களிலிருந்த மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

இம் மீள் குடியேற்ற கிராமங்களில் வீசிய மினி சூறாவளியினால் இக்கிராமங்களில் இருந்து 80 குடும்பங்கள் இடம் பெயர்நது ஊற்றுச்சேனை அரசினர் தமிழ் கனிஷ்ட பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இகுடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவர்களின் சேத விபரங்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் உதவிப் பணிப்பாளர் இன்பராஜன் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கிராமங்களில் வசித்து வந்த மக்கள், கடந்த கால போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து, பின்னர் தற்காலிக குடிசைகளில் வசித்து வருகின்றனர்.



# தமிழில் குழந்தைப் பாடல்கள்

- ஜடாயு -

எங்கள் ஒன்றரை வயது மகள் பேச ஆரம்பித்து உடனே பாடவும் ஆரம்பித்து விட்டாள். மழலை மொழியில் அவள் பாடும் அரைகுறைப் பாடல் வரிகள் கூட என் செவிகளுக்கு அளவில்லா ஆனந்தம் தரத் தொடங்கின. "குழலினிது யாழினிது..." என்னும் பொய்யில் புலவரின் அனுபவத்தை நேரடியாக உணர்ந்தேன்.

இந்தப் பாடல் வரிகளை அவள் எப்படிக் கற்றுக் கொள்கிறாள் என்று சில சமயங்களில் அனுமானிப்பது கூட கடினமாக இருந்தது. அவளைத் தூங்க வைப்பதற்காக நாங்கள் பாடும் பாடல்கள், அடிக்கடி நாங்கள் கேட்கும்/முணுமுணுக்கும் திரை இசை மற்றும் பக்திப் பாடல்கள், இது தவிர நாங்கள் உட்கார்த்தி வைத்து சொல்லிக் கொடுத்த பாடல்கள் எல்லாவற்றிலிருந்தும் சிற்சில வரிகள் சில சமயம் முழுப் பாடல்களை அவளே பாடுவாள்.

இவற்றில் ஆங்கிலப் பாடல்கள் எல்லாமே குழந்தைகளுக்கான எளிமையான, பிரபலமான "ரைம்ஸ்" வகையைச் சார்ந்தவை. "கிழவன் மெக்டொனால்ட் பண்ணை", "ஜாக்கும் ஜில்லும்", "வா வா கறுப்பு ஆடே" போன்ற பாடல்கள். இவற்றில் பல பாடல்கள் நாங்கள் வாழும் இடம், சூழ்நிலை மற்றும் கலாசாரத்திற்குத் துளியும் சம்பந்தமில்லாதவை - கறுப்பு ஆடு ஒன்றைப் பார்த்து "உன்னிடம் கம்பளி இருக்கிறதா" என்று நம் குழந்தைகள் பாடுவது ஒரு மாதிரி தான் படுகிறது..

மல்பெரி என்ற நாம் பார்க்காத ஒரு செடியை வைத்து "here we go around the mulberry bush.." என்று பாடக் கற்றுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த பாடல்களின் எளிமை மற்றும் ஓசை நயம் நன்றாக இருக்கிறது தான்... ஆனால் பாடலின் பொருள் தான் அன்னியமாகப் படுகிறது. இதில்லாமல் பொதுவாக எல்லா நாட்டினருக்கும் நன்றாகப் படும் "மின்னும் மின்னும் சிறு விண்மீன்" போன்ற ஆங்கிலக் குழந்தைப் பாடல்களும் இருக்கின்றன.

நகரங்களில் வாழும் படித்த, மேல் மற்றும் மத்திய தரக் குடும்பங்களில் இருக்கும் குழந்தைகள் எல்லாம் பெரும்பாலும் இந்த ஆங்கிலப் பாடல்களைப் பாடிக் கொண்டு தான் வளர்கின்றன.. பல வீடுகளில் பெற்றோர்களுக்கே தமிழில் குழந்தைப் பாடல்கள் எதுவும் தெரிவதில்லை.. அவர்களும் பெரும்பாலும் "ரைம்ஸ்" கேட்டு வளர்ந்தவர்களே. நகர வாழ்வின் பல கூறுகளை அப்படியே பல கிராமங்களும் பின்பற்றத் தொடங்கி




விட்டதால் அங்கும் நிலைமை இப்படித் தான் மாறிவரக் கூடும்.

இதில்லாமல் தப்பித் தவறிக் குழந்தைகள் தமிழில் பாடினாலும், அவை சமீபத்திய திரைப் பாடல்களாகவே இருக்கும் - என் மகள் "ஒன்றா ரெண்டா ஆசைகள்... எல்லாம் சொல்லவே... ஓர் நாள் போதுமா" என்று மழலை கலந்து பாடுவதைக் கேட்டு சிரிப்பு வருகிறது.. இத்துடன் "ஆசை ஆசை இப்பொழுது...", "தோ தோ தோ ஒன்று" போன்ற பாடல்களின் பல்லவிகளையும் அவள் பாடுகிறாள். சில பாடல்களின் வரிகள் நன்றாகவே இருக்கின்றன, இருந்தாலும் சின்னஞ்சிறு குழந்தைகள் பாடும்போது பொருந்தாதது போலத் தான் படுகிறது.

இதாவது பரவாயில்லை, "ஹையோ பத்திக்கிச்சு", "வை திஸ் கொலவெறி", "கலா கலா கலகலா" மாதிரி பாடல்களையெல்லாம் சில - 4 வயதுக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்துப் பாட வைக்கிறார்கள். நாராசமாகவும், அபத்தமாகவும் இருக்கிறது.. தயவு செய்து தமிழ்ப் பாடல் என்ற பெயரில் இத்தகைய பாடல்களை உங்கள் சிறு குழந்தைகள் பாட ஊக்குவிக்காதீர்கள்.

தமிழில் குழந்தைகளுக்காகவென்றே பாடல்கள் எழுதப்படுவது அரிதாகிவிட்டது. இன்னும் ஒரு தலைமுறை போனால் இவற்றைப் பாடுவதும் கேட்பதும் கூட அரிதாகி விடுமோ என்று தோன்றுகிறது. எங்கள் குழந்தைக்கு சில கர்ண பரம்பரையாக வரும் பாடல்களைக் கற்றுக் கொடுத்தோம்.. "நிலா நிலா ஓடி வா", "மாம்பழமாம் மாம்பழம்", "பிள்ளையார் பிள்ளையார்" போன்ற பாடல்களை அவள் பாடும்போது மிக இனிமையாக இருக்கும்... இவற்றில் சில பாடல்களின் வரிகள் சரியாகப் படுவதில்லை. "அம்மா இங்கே வா வா - ஆசை முத்தம் தா தா" நல்லது. "இலையில் சோறு போட்டு - ஈயைத் தூர ஓட்டு.. இது சரியில்லையே" வீட்டில் நல்ல சுகாதாரமான சூழலில் நாம் சாப்பிடுகிறோம், மின்விசிறியும் சுற்றுகிறது, ஈயே வருவதில்லை, பின் அதை எதற்காக ஓட்ட வேண்டும்? "இன்டெர்நெட்டைப் போட்டு - ஈமெ[illegible] எல்லாம் காட்டு" என்று மாற்றிப் பாடிக் கொள்ள வேண்டியது தான்!


# வழுக்கைத் தலையர்களுக்கு நற்செய்தி!



வழுக்கைத் தலையில் முடி முளைக்க வைப்பது தொடர்பாக ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஸ்டெம்செல் ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்துள்ளது. வழுக்கை எலிக்கு முடி முளைத்திருக்கிறது. உலகம் முழுவதும் சராசரியாக 25 சதவீத ஆண்கள் 30 வயதுக்குள் வழுக்கைத் தலையர் ஆகின்றனர். மற்றவர்களும் 60 வயதுக்குள் தலையில் உள்ளதை இழந்து விடுகின்றனர். வயது மட்டுமின்றி பரம்பரை, அதிக வேலைச்சுமை, மன அழுத்தம், சுற்றுச்சூழல் என பல காரணங்கள் இருக்கின்றன.

இந்நிலையில், ஸ்டெம்செல் உதவியுடன் வழுக்கைத் தலையில் முடி முளைக்க வைப்பது தொடர்பான ஆராய்ச்சியில் ஜப்பானின் டோக்கியோ பல்கலையில் உள்ள சுஜி அறிவியல், தொழில்நுட்ப ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். எலிகளை வைத்து இந்த ஆராய்ச்சி நடந்தது. ஸ்டெம்செல்லில் இருந்து முடி வளர்ச்சிக்குத் தேவையான ஃபோலிக்கிள் எனப்படும் பகுதிப் பொருள் மட்டும் எடுக்கப்பட்டு, வழுக்கை எலியின் தலையில் செலுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. எலியின் தலையில் வழக்கம்போல முடி முளைப்பதாக ஆராய்ச்சிக்குழுவின் தலைவர் டகாஷி சுஜி கூறியுள்ளார்.

# ஓசோன் ஓட்டை பாதிப்பு



உலகிலேயே அதிகக் குளிர் உள்ள பிரதேசமாக அண்டார்டிக்கா உள்ளது. அதில் இப்போது மாற்றம் வந்து கொண்டிருக்கிறது. புவி வெப்பமாவதால் அண்டார்டிக்கா பகுதியில் பனி உருகி கடல் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகச் செய்திகள் வந்தன. இப்போது அங்குள்ள ஆழ்கடலில் நீர் வேகமாக வற்றி வருகிறது என்னும் அதிர்ச்சித் தகவலை கடல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடலில் வற்றி வரும் தண்ணீரின் அளவு கடந்த 50 ஆண்டுகளில் 8 மில்லியன் மெட்ரிக் தொன் எனத் தெரிவிக்கின்றனர். இப்படி ஆவியாகிப் போன தண்ணீர் அமெரிக்க மிஸிஸிபி ஆற்றின் மொத்த தண்ணீரை விட அதிகம் இருக்குமாம். தண்ணீர் வற்றி வருவதற்கான காரணம் குறித்து ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். இருப்பினும் புவி வெப்பமாதலும் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டையும்தான் காரணம் என புவி ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இப்படி புவி வெப்பமாவதற்கு மனிதர்களாகிய நமது ஆசையும், அறியாமையும்தான் முக்கிய காரணம். இனி நம் வருங்கால சந்ததிகள் கையில் இந்தப் பூமியை பத்திரமாகப் பாதுகாத்து கொடுப்பது நம் கடமை.

# குல்வாலிலே முட்ம் மலர்ந்தல்[illegible]

தியேட்டர்களில் முன்புபோல் கூட்டம் இல்லை. இருந்தாலும் தனி மனித துதிபாடல் இன்னும் ஒழியவில்லை. சினிமா நடிகர்களின் ரசிகர் மன்றங்களும், கொடிகளும் தோரணங்களும் ஒழியும் வரை தமிழர்களுக்கு விமோசனம் இல்லை.

புது தமிழ் சினிமாப் பாட்டுக்களை ரசிக்கவே முடிவதில்லை. இசை என்கிற பெயரில் கர்ண கடூரமாக "நொட்டு நொட்டு" என்று தட்டுகிறார்கள். சனங்களும் அதை ரசிக்கிறார்கள் போலத்தான் தெரிகிறது. என்ன ரசனையோ போங்கள்... பாடல் வரிகளில் அதிகமான ஆங்கிலக் கலப்பு. கேட்கவே எரிச்சலாக இருக்கிறது.

அதை விடக் கொடுமை இப்படிப் பட்ட பாடல்களைப் பாடும் பாடகர்கள். பெரும்பாலான புதிய பாடகர்களுக்கு சரியான தமிழ் உச்சரிப்பு வருவதில்லை. ஒரு சிலர் வடக்கத்திக்காரர்கள். சொல்லவே வேண்டியதில்லை. தமிழ் சினிமாப் பாடல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தூவப் பட்டிருக்கும் தமிழ்ச் சொற்களைக் கடித்து, மென்று, காறித் துப்புகிறார்கள். நாராசமாக இருக்கிறது.

இல்லையா? எங்கோ டில்லியிலிருந்[illegible] தமிழ் தலையில் மண்ணை அ[illegible] வேண்டும்?


இவர்களை எல்லாம் தமிழில்[illegible] மல் தடுப்பதற்கு எனக்குத் தெரிந்[illegible] கொல்லங்குடி கருப்பாயியை ஹி[illegible] வைப்பதுதான். "காரே பூரே, கக்கரே பிக்கரே" என்று கருப்பாயி ஹிந்தியில் போட்டுத் தாக்கினால் எல்லாப் பயல்களும் வடக்குப் பக்கம் ஓடிப் போவார்கள். ஹிந்தியைக் காப்பாற்ற. தமிழ் பிழைத்துக் கொள்ளும்.



ஒரு விஷயத்தை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். தமிழ்[illegible] பிரபல பின்னணிப் பாடகர்களெல்[illegible] மொழிக்காரர்கள்தான். டி.எம்.செ[illegible] லிருந்து, எஸ்.பி.பாலசுப்பிரமணியம்[illegible] ஜெயச்சந்திரன் சுசீலா, ஜானகி மற்[illegible] சித்ரா, ஹரிஹரன் வரை வேற்று[illegible] தாய் மொழியாகக் கொண்டவர்[illegible] இந்தப் பாடகர்களின் தமிழ் உச்[illegible] குறை கூற முடியாது. காரணம் [illegible] சரியாக உச்சரிக்க வேண்டும் எ[illegible] இருந்தது. அதற்காகச் சிரத்தை எடுத்[illegible] உழைத்தார்கள். நம்மால் ரசிக்[illegible] இன்றைய பாடகர்களிடம் அது இ[illegible] முடியவில்லை.

இந்த மாதிரியான பாடகர்களுக்கு வருடா வருடம் "சிறந்த தமிழ்க் கொலைஞன்" பட்டம் தரலாம். பரிசா? கொடுக்க வேண்டியதுதான். நன்கு பழுக்கக் காய்ச்சிய சூட்டுக் கோலால் நாக்கில் "இப்படியொரு இழுப்பு, அப்படியொரு இழுப்பு", அப்புறம் எல்லாம் சரியாகப் போய்விடும்.

கடந்த வருட "சிறந்த தமிழ்க் கொலைஞனாக" நான் தேர்ந்தெடுத்திருப்பது உதித் நாரயணனை. எப்படியய்யா இந்த மாதிரியான ஆசாமிகளை




தமிழில் பாட வைக்கிறீர்கள்? தமிழ்நாட்டில் நல்ல குரல் வளமுடைய தமிழ்ப் பாடகர்களே

உதித் நாராயணும் நல்ல [illegible] ஹிந்தியில் மிக அருமையாகப் பா[illegible] மிகவும் பிடித்த ஹிந்திப் பாடகர்கள்[illegible] உ.நாராயணும் இருக்கிறார். [illegible] நிறுத்தியிருந்தால் நன்றாக இருந்திரு[illegible] பாடுகிறேன் பேர்வழி என்று இப்[illegible] தள்ளுகிறாரே என்றுதான்....

"குல்வாலிலே முட்ம் மலர்ந்தல்[illegible] என்ன அர்த்தம் என்று புரியாம[illegible] பிய்த்துக் கொண்டு அலைந்தது [illegible] தெரியும்?

- பி.எஸ்[illegible]

# கடந்த காலத்தில் இருந்துகொண்டு...



**வே**லியோடு சென்ற ஓணானை வேட்டிக்குள் விட்டுக் கொண்ட மனிதன், அது குத்துகிறது, குடைகிறது என்று புலம்பினானாம். அதுபோலவே, தங்களுக்கு என்று தற்போது உள்ள பிரச்சினைகள் போதாது என்பதுபோல், இலங்கையில் வாழும் தமிழ் மக்களிடம் இல்லாத ஒரு "கொடிப் பிரச்சினையை" கொடுத்து, அதன் மூலம் அரசியல் செய்ய சில கூட்டமைப்பு தலைவர்களும் சில பல புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் முயல்வது அவர்களுக்கு தங்களது மக்களின் அன்றாட பிரச்சினைகள் மீது அக்கறை இல்லையோ என்ற கேள்வியை எழுப்புகிறது.

இனப் போர் முடிந்த பின்னர் "ஒன்றுபட்ட இலங்கை" என்ற நாட்டினுள் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக உரிமைகளை பெற்றுத்தருதல் என்பதே கூட்டமைப்பின் குறிக்கோளாக அமைந்தது. அதற்கு ஆதரவாக தமிழ் சமூகம் தொடர்ந்து தேர்தல்களில் கூட்டமைப்பிற்கு வெற்றிகளை வழங்கி வந்துள்ளது. கூட்டமைப்பில் இருந்து பிரிந்து போர்க்கால அரசியல் நோக்குடன் தேர்தல்களை சந்தித்த "பிரிவினைவாதி"களுக்கு படுதோல்வியையே தமிழ் மக்கள் பரிசாக கொடுத்தனர்.

இதன் சாராம்சத்தை புரிந்துகொண்டு செயல்பட்டால், தற்போதைய "கொடிப் பிரச்சினை" தோன்றியே இருக்காது. மாறாக, கடந்த காலத்தில் இருந்துகொண்டு நிகழ்காலத்தை வழி நடத்தினால், தமிழ் சமுதாயத்திற்கு எதிர்காலமே இல்லாமல் போய் விடும். இதுதான் கடந்தகாலம் கூறும் உண்மை.

மற்றபடி, தனிப்பட்ட பிரச்சினையாக இதனை பார்க்காமல், இலங்கையில் தொடர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் அடிப்படை கவலைகளையும் எதிர்பார்ப்புகளையும் மட்டுமே கொண்டு இனப் பிரச்சினையின் எந்தவொரு அலகையும் அணுக பழகிக் கொள்ள வேண்டும்.

எப்போது இனப் பிரச்சினைக்கு இலங்கையின் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இருக்கிறதோ, அப்போதே இத்தகைய பிரச்சினைகளை பெரிதாக்காமல் விட்டுவிட வேண்டும்.

தற்போதைய "கொடிப் பிரச்சினை" சிங்களப் பேரினவாதிகளுக்கு வரப்பிரசாதமாகவே அமையும். இனப் போருக்குப் பின்னரும் தமிழ் மக்கள் மனம் மாறி ஒன்றுபட்ட இலங்கையில் கூடி வாழ தமிழர்கள் விரும்பவில்லை என்ற அவர்களின் பிரசாரத்திற்கு வலுச்சேர்ப்பதாகவே இந்த நிகழ்வு அமையும்.

எப்போது ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் இனத்திற்கு அரசியல் தீர்வு தேவை என்று முடிவு செய்யப்பட்டு விட்டதோ, அப்போது இருந்தே தமிழ் சமூகம் ஏற்றுக் கொண்டுள்ள முடிவு கூடிவாழ்தல்தான்.

கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, இனப் பிரச்சினையின் அடிப்படையில் போராடிவரும் தமிழ் அரசியல் கட்சிகள் நாடாளுமன்ற தேர்தல்களை புறக்கணித்ததில்லை. தாங்கள் உறுப்பினர்களாக பதவி ஏற்கும் போது, இலங்கை அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுவதாக மட்டுமே உறுதிமொழி எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

இலங்கையின் தேசியக் கொடியை அந்த அரசியல் சட்டம் இனம் காட்டியுள்ளது. எனவே, தற்போது அதுகுறித்து சர்ச்சையை கிளப்புவது, தன்னைத்தானே மீண்டும் மீண்டும் ஏமாற்றிக் கொள்வதற்கு சமம்.

**- என். சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.**

# நல்லிணக்கத்திற்கு எதிரான பாதை...



**த**மிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜாவே கொடி சர்ச்சையை தூண்டியுள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தின் போது தேசியக் கொடியை உயர்த்திக் காட்டிக் கொண்டு இருந்தமையையிட்டு கட்சியின் சார்பில் தாம் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்பதாக அவர் யாழ்ப்பாணத்தில் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கூட்டமொன்றின் போது கூறியிருந்தார்.

அவரது கூற்று அரசியலமைப்புக்கு முரணானது என கூறலாம். அதை விட முக்கியமான விடயம் இந்தக் கூற்று இப்போது ஏற்படுத்தியிருக்கும் சர்ச்சையே. சம்பந்தன் தாமாக தேசிய கொடியை ஏந்தவில்லையென்றும் அது அவரது கையில் திணிக்கப்பட்டதாகவும் மாவை கூறியிருக்கிறார்.

சம்பந்தன் தேசிய கொடியை விரும்பாவிட்டால் அதனை விக்கிரமசிங்கவோ மற்றொருவரோ கையில் திணித்த மட்டில் தூக்கிப் பிடிக்கும் அளவுக்கு கோழையா என்ற கேள்வி இங்கே எழுகிறது. அதுவும் அவ்வாறானதோர் நிலைமை யாழ்ப்பாணத்தில் ஏற்படுமா என்ற கேள்வியும் எழுகிறது. எனவே இது இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும் சர்ச்சையை கிளப்பிவிடும் என்றே தோன்றுகிறது.

தமிழ் பிரிவினைவாதப் போராட்டம் தோன்றியது முதல் தற்போதைய தேசிய கொடியையும் தேசிய கீதத்தையும் சிறுபான்மை மக்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு வந்துள்ளது. ஆனால் அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவ்விரண்டையும் ஏற்றுக் கொண்டே தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் சென்றுள்ளனர். புலிகளின் ஆதரவில் அந்தச் சபைகளுக்குச் சென்றவர்களும் அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வதாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.

அது தந்திரோபாய ரீதியில் மேற்கொள்ளப்பட்டது என சிலர் வாதிடலாம். எனினும் போர் முடிவடைந்ததன் பின்னர் தேசிய கீதத்தை ஏற்றுக் கொள்வதைப் பற்றிப் பிரச்சினை எதுவும் எழவில்லை. அதனை தமிழில் பாடுவதை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தமிழ் அரசியல்வாதிகளின் வாதமாகவிருந்தது. அது தேசிய கீதத்தை ஏற்றுக் கொண்டதற்கு சமமானதாகும்.

போர் முடிந்து கடந்த மூன்றாண்டுகளில் தேசியக் கொடியைப் பற்றிய சர்ச்சை எழுந்த முதலாவது முறை இதுவாகும். ஆனால் சங்கேதங்களைப் பற்றிய இது போன்ற சர்ச்சைகள் கூடுதல் அதிகாரங்களுக்காகவும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளுக்காகவும் நடத்தப்பட்டு வரும் போராட்டத்தை திசை திருப்பக் கூடிய அபாயம் இருக்கிறது.

சங்கேதங்களைப் பற்றிய சர்ச்சைகளால் உணர்வுகள் தூண்டுவதற்கான வாய்ப்புக்களும் அதிகம் ஏற்படலாம். எனவே அவற்றினால் நல்லிணக்கம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகம்.

**- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.**

# சினிமா சினிமா





**வி**ஜய் டிவியில் நடிகர் சூர்யா நடத்திவரும் "நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி"யை பார்த்துவிட்டு, பிரபல தொலைக்காட்சி சனல் ஒன்று வித்தியாசமான போட்டி நிகழ்ச்சி ஒன்றை உருவாக்கி அந்த நிகழ்ச்சியை நடத்த அஜித்திடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. கோடிகளில் சம்பளம் தருகிறோம் எனக் கூறியும் "இந்த கேம் ஷோவெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது" என மறுத்துவிட்டாராம் அஜித். தன்னைத் தானறியுமாம் "தல".



**உ**லக அழகியும் நடிகையுமான லாரா தத்தா இப்போது ஒரு பெண் குழந்தைக்குத் தாய். ஆனாலும் அவரை சில திரைப்படங்களிலும் விளம்பரங்களிலும் நடிக்க சிலர் அழைப்பு விடுத்துள்ளனர். ஆனால் "இனி நான் படத் தயாரிப்பில் ஈடுபடப் போகிறேன். நடிப்பது பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது" என்று பதில் சொல்லி வருகிறாராம் லாரா தத்தா. மறுப்புச் சொல்லவும் மனத்திடம் வேண்டும்!


**க**டந்த ஆண்டு எந்தத் தமிழ்ப் படத்துக்கும் இசையமைக்கச் சம்மதிக்காத ஏ.ஆர்.ரஹ்மான் இந்த ஆண்டு ரஜினியின் கோச்சடையான், மணிரத்னத்தின் கடல், தனுஷின் புதிய படம், விஜய்யின் யோஹன், கௌதம் மேனனின் தொலைக்காட்சித் தொடர் என ஆறு புதிய தயாரிப்புகளுக்கு இசையமைக்க ஒப்புக்கொண்டுள்ளார். ம்... இவர் பாடல்கள் கேட்டவுடன் பிடிக்கா விட்டாலும் கேட்கக் கேட்கப் பிடிக்கும்!



**சி**த்தார்த்துடன் அமலா பால் நடித்த, "காதலில் சொதப்புவது எப்படி?" படம், தமிழைவிட தெலுங்கில் வசூல் சாதனை புரிந்துள்ளது. இதனால், ராம் சரண் தேஜா உட்பட, அங்குள்ள பிரபல ஹீரோக்கள், அமலாவுக்கு அழைப்பு மேல் அழைப்பு விடுக்கின்றனர். அதனால், தெலுங்கில் கூடுதல் கவனம் செலுத்தப்போவதாக, சென்னையிலிருந்து இடம் பெயர்ந்து ஆந்திராவில் குடியேறியுள்ளார் அமலா. தமிழை விட்டு மைனா பறந்து விட்டது!



# இவ்வார யாழ்ப்பாணிய உரையாடல்!



**நல்லூர் நல்லையர் (ந.ந):** உவங்கள் உந்த மட்டக்களப்பானையும் திருக்கோணமலையானையும் நம்பேலாது பாருங்கோ!

**கொக்குவில் குமரேசர் (கொ.கு):** ஏன் பாருங்கோ அப்பிடிச் சொல்லுறியள்?

**ந.ந.:** முந்தி அவன் இராசதுரை போனான். பிறகு கருணா போனான். இப்ப இவன் திருக்கோணமலையானும் போட்டான்.

**கொ.கு.:** அவங்கள் போனதுக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கெண்டெல்லே சொல்லிறாங்கள் பாருங்கோ!

**ந.ந.:** கண்டறியாத காரணம். உவங்களையும் மோட்டுச் சிங்களவனையும் முந்தி எங்கடை ஆக்கள் இருத்தி எழுப்பினவங்கள். உவன் அறுந்து போன பண்டாரநாயக்கா வந்துதான் எல்லாத்தையும் தாலியறுத்தவன்.

**கொ.கு.:** நாங்களும் அறுவது அறுவத்தஞ்சு வருசமாச் சொல்லிறம். ஆனால் எங்கடை ஆக்களே எங்களுக்கு குழிபறிக்கிறாங்கள் எண்டேக்கிலை இதில ஏதோ விசயம் இருக்கு பாருங்கோ. இனி மாவையைத்தான் நம்ப வேணும்.

**ந.ந.:** அவரோ! அவற்றை வண்டவாளத்தை அவிட்டன் எண்டால் அதைத் தண்டவாளத்திலைதான் ஏத்தவேணும்.

**- நன்றி: தேனீ**

# நிலையான தீர்வினை ஏற்படுத்த கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## அழைக்கிறார் அமைச்சர் திஸ்ஸ



(கொழும்பு)
சகல கட்சிகளும் காலம் கடத்தாது ஒன்றிணைந்து செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கான நிலையான தீர்வுத்திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமென அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்பது முக்கியமானதொரு விடயமாகும். சகல கட்சிகளும் காலம் கடத்தாது ஒன்றிணைந்து செயற்படுவதனால் மாத்திரமே நிலையான தீர்வுத் திட்டத்தை பெற்றுக் கொள்ள முடியும். அண்மையில் யாழ். மேதினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிறந்த செய்தியொன்றை வெளிப்படுத்தியிருந்தார்.

அதாவது பிரிவினைவாதத்தை புறந்தள்ளி விட்டு, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை ஏற்படுத்துவதே இது ஆகும். இந்தச் செய்தியினை அரசாங்கம் உட்பட அனைதது தரப்புகளும் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனித்து செயற்படமாட்டார்.

ஆரம்ப காலங்களில் பண்டா - செல்வா மறறும் டட்லி - செல்வா போன்ற ஒப்பந்தங்களின் மூலம் அச் சிங்களத் தலைவர்கள் பெரும்பான்மை இன மக்களின் ஆதரவுகளை இழந்தனர்.

இந்நிலை தனக்கு ஏற்படக்கூடாது என பதில் தற்போதைய ஜனாதிபதியும் உளளார் என்பதே உண்மை. இது தொடர்பில் சம்பந்தன் எம்.பி.யிடம் பலமுறை கூறியுள்ளேன். எனவே, நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அரசியல் தீர்விற்கான களமாக பயன்படுத்திக் கொள்வதே சிறந்தது.

இதில் அனைத்துத் தரப்புகளும் உள்வாங்கப்படுவதால் விமர்சனங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. எவ்வாறாயினும் அரசாங்கம் கூட்டமைப்பை தெரிவுக் குழுவிற்குள் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். இதற்கான நம்பகத்தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# முச்சக்கரவண்டி பயண அனுமதி மூவரென்ற விதி அமுலானது

(கொழும்பு)
முச்சக்கரவண்டியொன்றின் பின் ஆசனத்தில் 3 பயணிகள் மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதிக்கும் சட்டத்தை நேற்று முதல் பொலிஸ் திணைக்களம் கடுமையாக அமுல்படுத்தியுள்ளது.

வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கை உதவியளிக்குமென பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து மே மாதம் 7 ஆம் திகதி வரையான காலத்தில் 27 முச்சக்கர வண்டி விபத்துக்கள் இடம்பெற்றதாகவும் இவ்விபத்துக்களில் 34 பேர் பலியானதாகவும் அவர் கூறினார்.

முச்சக்கர வண்டி விபத்து ஏற்பட்டால் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், சேவையில் ஈடுபடும் 67,000 முச்சக்கரவண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.



இதேவேளை, முச்சக்கரவண்டியொன்றின் பின் ஆசனத்தில் 3 பயணிகள் மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதிக்கும் சட்டத்திற்கு முச்சக்கரவண்டி மீற்றர் ரக்ஸி சங்கம் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

# மாணவனிடம் பாலியல் சேட்டை; பாடசாலை அதிபர் கைது

(மட்டக்களப்பு)
08 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் 13 வயது மாணவனிடம் பாலியல் சேட்டை செய்த பாடசாலை அதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாணவனின் தாயார் செய்த முறைப்பாட்டை அடுத்து சிங்களப் பாடசாலையொன்றின் 54 வயதான இந்தப் பாடசாலை அதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அடிப்படையில் கடந்த 02 ஆம் திகதி அதிபரின் அலுவலகத்தில் வைத்து அதிபர் மாணவனிடம் தகாத முறையில் நடந்து கொண்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள அதிபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மின்னல் தாக்கி இருவர் மரணம்

(திருகோணமலை)
கந்தளாய் மற்றும் திம்புலாகல பகுதிகளில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த இருவரும் மின்னல் தாக்கத்திற்கு உள்ளானதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய மின்னல் தாக்கத்திற்குள்ளாகி வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

கடந்த சில நாட்களாக நிலவிய உஷ்ணமான காலநிலை மாற்ற மடைந்து, மீண்டும் மழை பெய்யக்கூடும் எனத் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# 24 பாடசாலைகளில் கணினிகள் திருட்டு

(கொழும்பு)
இரத்தினபுரி, கொலொன்ன கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கணினிகள் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

தமது கல்வி வலயத்திலுள்ள 24 பாடசாலைகளின் கணினிகள் மற்றும் கணினிப் பாகங்கள் திருடப்பட்டுள்ளதாக கொலென்ன வலய கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், கொலென்ன, அம்பிலிப்பிட்டி மற்றும் பனாமுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்பத்தை கற்பிப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவிக்கையில்,

குறித்த பொலிஸ் நிலையங்களில் இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# நகர அபிவிருத்தி அதிகாரசபையில் யாழ். மாவட்டமும் உள்ளடக்கம்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)
நகர அபிவிருத்தி அதிகார சபையில் யாழ்ப்பாணம் உட்பட 18 மாவட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏசியன் ட்ரிபியூன் இணையத் தளத்திற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் தற்போது அவசரகால நிலைமை இல்லாத போதிலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளிடமிருந்து இலங்கையை பாதுகாக்கும் பொறுப்பு படையினரிடமுளளது.

விடுதலைப் புலிகள் இலங்கையில் முற்றாக தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்களின் செயற்பாடுகள் வெளிநாடுகளில தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இலங்கையில் சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது பாதைத் தடைகளோ, சோதனைச் சாவடிகளோ இல்லாது செய்யப்பட்டுள்ளன.

எனினும் வெளிநாடுகளில் இடம்பெறுகின்ற விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பல அவதானமாக இருக்க வேண்டும்.

தற்போது கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகளைப் போல, எதிர் வரும் காலங்களில் ஏனைய மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இம்முறையும் பாத யாத்திரை

(மட்டக்களப்பு)
வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவை யொட்டிய பாத யாத்திரை வழமை போல் இம்முறையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இம்முறை யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் மே 18 இல் ஆரம்பிக்கும் பாதயாத்திரை ஜுலை 18 இல் கதிர்காம கொடியேற்றம் நடைபெறும் தினத்தன்று சென்றடையவுள்ளது.

மட்டக்களப்பு - காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி தலைமையில் இருமாத காலம் இடம்பெறும் இப் பாதயாத்திரை, கடந்த பல வருடங்களாக வெருகல் முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க சுவாமி பற்றிக் ஹரிகன் கடந்த 1990 காலப் பகுதியில் ஆரம்பித்த இப் பாதயாத்திரையை 2004 முதல் வேல்சாமி பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

காரைதீவு சிறி நந்தவன சித்தி விநாயகர் ஆலய தர்ம கர்த்தாவான ச. மகேஸ்வரன் என்பவரே வேல்சாமி ஆவார்.

இப் பாதயாத்திரையில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றி அறிவிக்கப்பட்டிருகிறது.






அளவெட்டி புனித சூசையப்பர் தேவாலய வருடாந்த பெருநாள் கடந்த முதலாம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. ஒரு வாரத்துக்கு மேலாக நடைபெற்ற விசேட வழிபாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து நடைபெற்ற சூடுசுற்றுதல் நிகழ்வின்போது பெருமளவான கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர்.

# முதன் முறையாக சோளம் ஏற்றுமதி

(கொழும்பு)
. இலங்கையில் இருந்து முதற் தடவையாக சோளத்தை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் முதற்கட்டமாக ஒருதொகுதி சோளம் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக, விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தாய்வான் மற்றும் கனடா போன்ற நாடுகளுக்கு இது ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. இலங்கையில் வருடாந்தம் 1 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் தொன் சோளம் உள்நாட்டு பாவனைக்கு தேவைப் படுகிறது.

எனினும் வருடாந்தம் 2 இலட்சம் மெட்ரிக் தொன் சோளம் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில், மேலதிக சோளத்தில் 10 மெட்ரிக்தொன் சோளம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

29) கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து அதிகாலை 4.30 மணிக்குப் புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம் 2 மணித்தியாலம் 35 நிமிடப் பயணத்தின் பின் தாய்லாந்தை சென்றடைந்தது. இலங்கை நேரப்படி விமானம் தாய்லாந்தைச் சென்றடைந்த நேரம் என்ன?
1) மு.ப. 6.50  2) மு.ப. 6.55  3) மு.ப. 7.05

30) ஒரு பேனாவையும், அழிறப்பரையும் ரூபா 23.00 இற்கு வாங்கினேன். அழிறப்பரைவிட பேனாவின் விலை ரூபா 7.00 அதிகமாகும். அழிறப்பரின் விலை என்ன?
1) ரூபா 7.00  2) ரூபா 8.00  3) ரூபா 9.00

31) 2008 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை எனில், மார்ச் மாதம் 1ஆம் திகதி என்ன கிழமை?
1) திங்கள்  2) செவ்வாய்  3) புதன்

32) 36 கிலோகிராம் சீனி மூடையிலிருந்து 4 கிலோகிராம் 350 கிராம் சீனி விற்கப்பட்டால், மூடையில் மீதியாகவுள்ள சீனியின் நிறை எவ்வளவு? (..............................)

33) காலை 10 மணிக்குக் குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்களின் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலம் 45 நிமிடங்கள் எடுத்தது. பேருந்து பயணத்தைப் பூர்த்தி செய்த நேரம் என்ன? (..............................)

34) ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு இரண்டுவேளை உணவாக நான்கு விசுக்கோத்துக்கள் வீதம் வழங்கப்படுகிறது. 128 விசுக்கோத்துக்கள் அடங்கிய பைக்கற்று எத்தனை தினத்திற்குப் போதும்?
(..............................)





35) குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து 35 நிமிடங்களின் பின்னர் புறப்பட்ட மகிழூர்ந்து ஒன்று பி.ப. 3.45 இற்குப் பயணத்தை நிறுத்தியது. மகிழூர்ந்து பயணத்திற்காக 8 மணி 15 நிமிடங்கள் எடுத்திருப்பின் புறப்பட்ட நேரம் யாது? (..............................)


36) 8 முயல்கள் 24 கரட்டை 3 உணவு வேளைகளில் உண்டு முடிக்குமாயின், ஒரு முயல் 24 கரட்டை உண்டு முடிப்பதற்கு எத்தனை உணவு வேளைகள் எடுக்கும்?
(..............................)

37) ஒரு தொன் நிறையுடைய சீனியிலிருந்து ஒவ்வொன்றும் 50 கிலோகிராம் கொண்டதான எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்? (..............................)

38) வீட்டிற்கு வந்த கூட்டத்தவர் ஐம்பத்திரெண்டு பேருக்கு 75 மில்லிலீற்றர் வீதம் குளிர்பானம் பரிமாறப்பட்டது. அதற்காக எத்தனை போத்தல்கள் குளிர்பானம் தேவை?
(..............................)

**முதல் உருவுக்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.**

39) (1)  (1)  (2)  (3) 

40) (2)  (1)  (2)  (3) 



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

கணிதம்


## கல்வி முரசு

வெளியீடு 64



**சரியான விடையின் கீழ் கோடிடுக.**


01) ஒரு தெருவில் 21 மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின்கம்பங்களுக்கு இடையிலான தூரம் 15 மீற்றர் எனில், முதல் மின்கம்பத்திற்கும் கடைசி மின்கம்பத்திற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?
1) 315 மீற்றர்  2) 300 மீற்றர்  3) 285 மீற்றர்


02) 

அருகிலுள்ள உருவின் நிழற்றப்படாத பகுதியின் தசம எண் யாது?
1) 0.3  2) 0.6  3) 0.7

03) ஒரு குளிர்பானப் போத்தல் 1 லீற்றர் 250 மில்லி லீற்றர் நீரைக் கொள்ளும். இவ்வாறான 6 போத்தல்கள் கொள்ளும் நீரின் கனவளவு யாது?
1) 7 L 750 ml  2) 7L 500 ml  3) 6 L 500 ml

04) கடதாசித் தாள் ஒன்றில் கடதாசிக் கீலங்களை ஒட்டுவதன் மூலம் உருவில் காட்டப்பட்டுள்ள வடிவம் ஆக்கப்பட்டுள்ளது. இதில் ▶ பகுதியை ஆக்க 5 சென்ரிமீற்றர் நீளமான கடதாசிக் கீலம் தேவைப்பட்டது எனில், இந்த உருவத்தை ஆக்கத் தேவைப்படும் கடதாசிக் கீலம் எவ்வளவு?
1) 25 cm  2) 30 cm  3) 35 cm



05) 

அருகில் உள்ள உருவானது 6 cm X 5 cm X 4 cm அளவுடைய செங்கற்களால் அமைக்கப்பட்டது. இதன் உயரம் எவ்வளவு?
1) 20 cm
2) 12 cm
3) 16 cm

06) ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நின்றபோது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர் தொகை எத்தனை?
1) 11  2) 12  3) 13


07) ஒரு கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை ரூபா 80.00 ஆகும். 2 கிலோகிராம் 350 கிராம் வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?
1) ரூபா 180  2) ரூபா 188  3) ரூபா 189

**பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி சரியான விடை தருக.**

□ + ○ = 800g
□ - ○ = 200g

08) பின்வரும் தொடர்புகளில் சரியானது எது?

(1) □ + □ + □ = ○ + ○ + ○ + ○
(2) □ + □ = ○ + ○ + ○
(3) □ + □ + □ = ○ + ○ + ○ + ○ + ○

09)  என்பதன் பெறுமானம் யாது?
1) 1300 g 2) 900 g 3) 700 g

10) ஒருவர் அமெரிக்க நாட்டில் பணி புரிகிறார். இவருக்கான மாதச் சம்பளம் 800 அமெரிக்க டொலர்களாகும். அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமானம் ரூபா 120.00 எனில், இலங்கை நாணயத்தின்படி அவரது மாதச் சம்பளம் எவ்வளவு?
1) ரூபா 86,000 2) ரூபா 92,000 3) ரூபா 96,000

11) ஒரு வியாபாரி தேயிலையை மொத்தமாக வாங்கி, அதனைச் சில்லறையில் விற்பனை செய்வார், இவர் 100 கிராம் கொண்ட தேயிலைப் பைக்கற்றுக்களைப் பொதி செய்து விற்பனை செய்வார்? 4 கிலோகிராம் 500 கிராம் தேயிலையிலிருந்து பொதி செய்யக்கூடிய 100 கிராம் தேயிலைப் பைக்கற்றுக்கள் எத்தனை?
1) 50 2) 45 3) 40

12) மட்டுநகரின் ஒரு குறித்த நாளின் வெப்பநிலை தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| நேரம் | வெப்பநிலை பாகை செல்சியஸ் |
|---|---|
| மு.ப. 8.00 | 29°C |
| மு.ப. 10.00 | 32°C |
| ந.ப. 12.00 | 34°C |
| பி.ப. 4.00 | 31°C |

உயர் வெப்பநிலைக்கும் தாழ் வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் எவ்வளவு?
1) 3°C 2) 4°C 3) 5°C


வீட்டுத்தோட்டமொன்றில் 10 மாங்கன்றுகள், 9 வாழைகள், 8 தென்னை மரம், 3 அவகாடோ மரம் என்பன உள்ளன.

13) தாவரங்கள் ஒவ்வொன்றுக்கும் 500 கிராம் வளமாக்கி இட்டால், எல்லா மரங்களுக்கும் எவ்வளவு வளமாக்கி தேவை?
1) 20 கிலோகிராம் 2) 18 கிலோகிராம் 3) 15 கிலோகிராம்

14) ஒரு கிலோகிராம் வளமாக்கி ரூபா 40.00 எனில், வளமாக்கியைக் கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவை?
1) ரூபா 600 2) ரூபா 720 3) ரூபா 800

15) தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் தொகை 163 ஒரு வகுப்பறையில் 20 மாணவர்கள் மாத்திரமே பரீட்சை எழுதலாம். இம்மாணவர்களுக்கு எத்தனை வகுப்பறைகள் தேவை?
1) 8 2) 9 3) 10

16) எதிரே ஒரு சதுரமுகியின் வரிப்படம் தரப்பட்டுள்ளது. இதன் ஒருபக்க நீளம் 100 சென்ரிமீற்றர் எனில், சதுரமுகியின் ஒரு பக்கத்தின் பரப்பளவு எவ்வளவு?
1) 800 $cm^2$ 2) 1000 $cm^2$ 3) 2800 $cm^2$




17) ஒரு மீற்றர் கம்பியை வாங்குவதற்கு ரூ. 40.00 தேவை. 4 மீற்றர் 25 சென்ரி மீற்றர் கம்பியை வாங்க எவ்வளவு பணம் தேவை?
1) ரூபா 160 2) ரூபா 170 3) ரூபா 180

18) தயா தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி சிறிது தூரம் சென்றபின், வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றபின் இறுதியில் இடது கைப்பக்கம் திரும்பினான். இப்போது தயா எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்?
1) வடக்கு 2) தெற்கு 3) மேற்கு



19) இப்போது எனக்கு 11 வயது. எனது தம்பியின் வயது 4 ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதை விட இருமடங்காகும்?
1) 3 வருடம் 2) 4 வருடம் 3) 8 வருடம்


20) 5 மீற்றர் நீளமான கம்பித்துண்டு ஒன்றிலிருந்து 2 மீற்றர் 85 சென்ரிமீற்றர் நீளமுள்ள கம்பித்துண்டு வெட்டியெடுக்கப்பட்டது. மீதித்துண்டின் நீளம் எவ்வளவு?
1) 2 m 15 cm 2) 3 m 15 cm 3) 3 m 25 cm

21) 
எதிரேயுள்ள சதுரத்தின் சுற்றளவு 280 சென்ரிமீற்றர் எனின், அதன் ஒருபக்க நீளம் எவ்வளவு?
1) 75 சென்ரிமீற்றர்
2) 70 சென்ரிமீற்றர்
3) 65 சென்ரிமீற்றர்

22) ஒரு பூந்தோட்டத்தில் ரோசா, மல்லிகை, லில்லி, சாமந்தி எனும் பூஞ்செடிகள் ஒழுங்கு முறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 31 ஆவது பூஞ்செடியின் பெயர் என்ன?
1) மல்லிகை 2) சாமந்தி 3) லில்லி

23) தந்தையின் வயது மகனின் வயதின் மூன்று மடங்கு ஆகும். தந்தையின் வயது 42 எனின், மகனின் வயது என்ன?
1) 14 2) 15 3) 16

**பின்வரும் பொருள்களின் விலைகளின் கூட்டுத்தொகையை அவதானித்து விடைதருக.**




ரூ. 235 ரூ. 115 ரூ. 105

24) ஒரு அழிறப்பரின் விலை எவ்வளவு?
1) ரூபா 5.00 2) ரூபா 10.00 3) ரூபா 15.00

25) ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?
1) ரூபா 75.00 2) ரூபா 90.00 3) ரூபா 100.00

26) அருகிலுள்ள வரிப்படத்திலுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?
1) 5 cm 2) 7 cm 3) 9 cm




27) ஒரு குவியலிலுள்ள தோடம்பழங்களை ஒருவருக்கு 4 வீதம் பங்கிட்டு 12 பேருக்குக் கொடுக்கலாம். அதனை ஒருவருக்கு 6 வீதம் கொடுத்தால் எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?
1) 8 2) 7 3) 6

28) ஒரு பையிலுள்ள இலக்கம் 2 உம், இலக்கம் 4 உம் 16 உள்ளன. இந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை 56 ஆகும். எனவே பையிலுள்ள இலக்கம் 2 எத்தனை?
1) 4 2) 8 3) 16

# சிறுவர் மீதான துஷ்பிரயோகம்; யாழ். மாவட்டம் இரண்டாமிடம்

(கிரு)

கடந்த வருடம் வடமாகாணத்தில் இடம்பெற்ற சிறுவர் மீதான துஷ்பிரயோகச் சம்பவங்களில் யாழ். மாவட்டம் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளதாகவும், வவுனியா மாவட்டம் முதல் நிலை பெற்றுள்ளதாகவும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் மொத்தம் 201 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள் மீதான 66 பாலியல் துஷ்பிரயோகங்கள், 12 உடலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள், 01 மனரீதியான துஷ்பிரயோகங்கள், 05 தற்கொலைமுயற்சிகள், 01 தற்கொலைச்சம்பவம், 16 உதாசீனம், 25 சட்டத்துடன் முரண்பட்ட சம்பவங்கள், 13 தனித்து விடப்பட்ட சம்பவங்கள், 01 சிறுவர் விற்பனை, 02 கடத்தல், 14 இளவயதுத் திருமணம் உட்பட 155 வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களில் 3,4,5 ஆம் இடங்களை முறையே முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் பெற்றுள்ளன.

அத்துடன், வடமாகாணத்தில் 2,097 பெற்றோரை இழந்த சிறுவர்களும், பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த 10,404 சிறுவர்களும் உள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட 41 சிறுவர் இல்லங்களும், 29 பதிவுசெய்யப்படாத இல்லங்களும் காணப்படுவதாக கூறப்பட்டுள்ளதுடன், இவற்றில் 18 சிறுவர் இல்லங்களே அனைத்து வசதிகளுடன் இயங்குகின்றன. 19 இல்லங்கள் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அத்துடன், 31 சிறுவர் இல்லங்கள் மூடுவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. (சி)

# பல்கலை பௌத்த சங்கத்தின் வெசாக் கொண்டாட்டம்

யாழ்.பல்கலைக்கழக பௌத்த சங்க மாணவர்களால் கடந்த சனிக்கிழமை மாலை பரமேஸ்வரர்ச் சந்தியில் வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களும் இவர்களுடன் இணைந்து அன்றையதினம் வீதியால் சென்றவர்களுக்கு குளிர்பானங்களை வழங்கி வெசாக் பண்டிகையைக் கொண்டாடினர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2011ஆம் ஆண்டு பௌத்த சங்கம் உருவாக்கப்பட்டமையை அடுத்து இரண்டாவது தடவையாகவும் இவர்கள் வெசாக் பண்டிகையை வெகு சிறப்பாகக் கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)





# இரதோற்சவம்

(ஜெய்விசாந்)

யாழ். கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள அருள் மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காலை 7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையினைத் தொடர்ந்து, சுவாமி உள்வீதி மற்றும் வெளி உலா வந்து தேரில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேர் பழம் வீதி, பலாலி வீதியூடாக வீதிவலம் வந்து பின்னர் அரசடி வீதியூடாக ஆலயத்தைச் சென்றடைந்தது. இன்று புதன்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (சி)

# வருமானத்தைப் பெருக்கும் தும்புக் கைத்தொழில்

(யாழ்ப்பாணம்)

குடும்ப வருமானத்தினைப் பெருக்குவதற்காக வீட்டிலிருந்தபடியே கைத்தொழில்கள் செய்து வரும் பெண்கள் யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரையில் அதிகமாகவே காணப்படுகின்றனர். அந்தவகையில் தும்புக்கைத்தொழிலை, தான் செய்துவருவதாக 25 வருடங்களாக இத்தொழிலைச்செய்துவரும் மணியந்தோட்டத்தைச் சேர்ந்த மன்மதராசா சுமுணாவதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர்தெரிவிக்கையில்;

எனது கணவர் ஒரு கடற்தொழிலாளி. எனினும் வருமானத்தை பெருக்கும் நோக்குடன் இந்தக் குடிசைக் கைத்தொழிலை 25 வருடங்களாக வீட்டிலிருந்தபடியே என்னுடைய பகுதி நேர வேலையாகச் செய்து வருகிறேன்.

கயிறு திரிப்பதற்கு பிரதான மூலப்பொருளாகக் காணப்படும் தேங்காய்த் தும்பினைப் பெறுவதற்காக தேங்காய் மட்டைகளை (பொச்சு மட்டை) 2 அடி குழியில் கடற்கரையிலே தாட்ட பின்னர் 6 மாதங்கள் கழித்து வெளியே எடுத்து பதப்படுத்தி நெசவு இயந்திரத்தினைப் பயன்படுத்தி அவற்றைக் கயிறாகத் திரிக்கிறோம்.




கயிற்றினைத் திரிப்பதற்குப் பயன்படும் இயந்திரங்களிற்கான செலவு 15 ஆயிரம் ரூபாவாக இருக்கின்ற போதும் எமக்கு சமுர்த்தி அதிகார சபையினால் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தேங்காய் மட்டை ஒன்றினை 3 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதாகவும், ஒரு கிலோ தும்பு 100 ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும் இதனை கயிறாக்கும் போது 50 ரூபா இலாபம் கிடைப்பதாகவும், கயிறு ஒன்றினைத் திரிப்பதற்கு மூன்று பேர் அவசியம் தேவை என அவர் தெரிவித்தார். (சி)

# மெய்தான் பாருங்கோ...

## தீமையான(து) கோபம்



ஒருநாளும் கோபத்திலயிருக்கேக்கை கடிதம் எழுதக்கூடாதெண்டு சொல்லுறவை பாருங்கோ.

கடிதத்தில எழுதவேண்டிய விசயத்தை கோபநேரத்தில எழுதாமல் விட்டிட்டு, அந்தப் பிரச்சினையை மனதில ஊறப்போட்டிட்டு, பிறகு எழுத வெளிக்கிட்டால், கோப உணர்வுகளில வாற சில வாத்தையள் தவிர்க் கப்பட்டு, மென்மையான சொற்பதங் கள் எழுத்தில வந்து சேரும் கண்டியளே!

அதோட இதில இன்னுமொரு விசயம் இருக்குது பாருங்கோ.

எழுத வெளிக்கிடுகிற விசயத்தை மனசுக்குள்ள ஊறப்போட்டிட்டு இருக்கேக்கை, கோபம் மெல்லத்தணிஞ்சு போகும். இப்பிடித் தணிஞ்சு போகேக்கை, நாங்கள் யாரில கோபப்பட்டு கடிதம் எழுதவெளிக்கிட்டமோ, அவர் மீதிருந்த கோபமும் மெல்ல மெல்லக் குறைஞ்சும் போயிடும்.

வாழ்க்கையில எந்தவொரு மனிசனும் எந்தவொரு உணர்வுகளில பூரணப்பட்டவனாக இருக்க முடியாது. ஏதாவது ஒரு உணர்வில பலவீனமாகத்தான் இருப்பான் பாருங்கோ.

ஆசை, கோபம், அன்பு, விருப்பு, வெறுப்பு, பொறுமை... இப்பிடி எத்தனையோ உணர்வுகள் மனிசனுக்கு இருக்குது. இதில எல்லாம் பூரணப்பட்டும் இருக்காது. பூரணமாகக் குறைவடைஞ்சும் இருக்காது.

எனக்குள்ள இருக்கிற உணர்வுகள் எல்லாம் பூரணப்பட்டதில்லைப் பாருங்கோ. ஒண்டு கூடினா ஏதோ ஒண்டு குறையுறமாதிரி இருக்கும். எல்லாம் எனக்குள்ள் பூரணப்பட்டிருந்தால், இப்ப இதில நான் உங்களோடை நிண்டு பறைஞ்சு கொண்டிருக்க மாட்டன். உடம்பில பட்டையும் ; கொட்டையும் போட்டுக்கொண்டு எதிலும் பற்றற்ற வாழ்வாய் ஏதாவது கோயில் வழியப்போய் சேந்திருப்பன்.

எந்தவொரு உணர்வுகளும் மனதிலிருந்து பீறிட்டு எழும்பக் கூடியதுதான். ஆனா அதைக் கட்டுப்படுத்துறதுக்கு எல்லாராலையும் முடியாது. அதிலும் கோபம் எண்டதொரு உணர்வு மனிசனில இருக்குது பாருங்கோ! அது மிகவும் பொல்லாதது.

சீழ்பிடித்த புண்ணில முள்ளுக்குத்துற வலிமாதிரி... மற்றவையள் ஏதேனும் பிடிக்காததைச் சொன்னால், செய்கை காரியங்களால செய்து காட்டினால், பாதிக்கப்படுகிறவன் எவ்வளவுதான் பொறுமைசாலியாக இருந்தாலும், அறிவாளியாக இருந்தாலும் அந்தக்கணத்தில தன்நிலையை மறந்து போகிறான் பாருங்கோ.

இது எல்லோருக்குமான பொதுவான உணர்வு கண்டியுளே. இந்த உணர்வு தவிர்க்கேலாத சூழ்நிலையள்ள தகிக்கேக்கை உடன அந்த இடத்தை விட்டு அப்புறமாப் போகிடவேணும்.

அதேநேரத்தில போனிலையோ, அல்லாட்டி கடிதத்திலையோ, கதையாகவோ, கவிதையாகவோ வாத்தைகளைக் கொட்டி எழுதிக்காட்டக் கூடாது. நான் ஏன்இப்ப இதைச் சொல்ல வாறன் எண்டால் முன்னம் உப்பிடித்தான் ஒருக்கா ஓராளோடை ஒரு 'கொளுவல்' வந்திட்டுது.

எனக்கு ஏதோ அவமானப்பட்டுப்போன மாதிரி உணர்வு. நான் பேசிப்போட்டன். அவரும் நீங்கள் இனி என்னோடை கதைக்கக்கூடாது எண்டமாதிரி நடந்து போட்டார். அந்த நேரம் என்ர மனசு பட்டபாடிருக்கே அதைச் சொல்லி மாளேலாது.

எனக்கும் பலவகைப்பட்ட பிரச்சினையளாலை என்நிலை தவறியிட்டன்... எண்டது விளங்கிச்சுது. அந்தாளிட்டை மன்னிப்புக் கேட்டுப் போட்டு பேசாமல் ஒதுங்கியிட்டன் பாருங்கோ. என்னோடை பிரச்சினைப்பட்டவரும் இப்ப தானும் தன்ர பாடுமாக இருக்கிறார்.

இதுக்கெல்லாம் காரணம் சினம்! "ஆறுவது சினம்" எண்டு ஒளவைப்பாட்டி சொல்லித்தந்தைக் கடைப்பிச்சுக் கொண்டு வந்தும், கடைசியில நிதானம் தவறினதால நிம்மதி குலைஞ்சு போனமாதிரியிருக்குது இப்ப.

மனக்காயங்களைக் காலம் ஆற்றும் எண்ட நம்பிக்கையில இப்ப என்ரகாலம் போகுது. மற்றவையெண்டால் கொளுவல் பிரச்சினைக்கு பழிவாங்க வெளிக்கிட்டிருப்பினம். ஆனா நான் அப்பிடி நினைக்கேல்லை.

ஏன் தெரியுமே?

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் -12 : 21)" எண்ட வேத வசனத்தின் படி... தீமையை நன்மையினால, கோபத்தை அன்பினால வெல்ல முடியும் எண்ட நம்பிக்கை எனக்கு இப்பவும் இருக்குது பாருங்கோ!.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# நாட்டை வலிமைப்படுத்துவதற்கு அணுகுண்டுத் தயாரிப்பு அவசியம்

## என்கிறார் அப்துல்கலாம்




(காரைக்குடி)

நாட்டை வலிமைப்படுத்த, பாதுகாக்க அணுகுண்டு, ஏவுகணை தயாரிப்பு மிக அவசியம் என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பேசியதாவது,

இந்தியாவில் 60 கோடி இளைஞர்கள் உள்ளனர். இளைஞரகள் தான் இன்றைய இந்தியாவின் சொத்து. எனவே நான் செல்லும் இடங்களில் எல்லாம் இளைஞர்களைச் சந்தித்து அவர்களை ஊக்கப் படுத்தி வருகிறேன்..


புதிய கண்டுபிடிப்புக்களை கணடுபிடிக்க இன்றைய இளைய சமுதாயத்தினர் முன்வர வேண்டும. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ஒவ்வொரு மாணவரும் 10 மரக் கன்றுகளை நட வேண்டும். இவ்வாறு அவர் பேசினாா.

நிகழ்ச்சியில் பள்ளி மாணவி ஒருவர், இந்தியா அமைதியான நாடு எனக் கூறிவரும் நிலையல் அணுகுண்டு, ஏவுகணைத் தயாரிப்பு அவசியமா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு கலாம் பதில் கூறுகையில், அந்நிய நாடுகளிடம் இருந்து நம்மைப் பாதுகாத்து கொள்வது அவசியம். நாட்டை வலிமைப்படுத்தவும், பாதுகாக்கவும் அணுகுண்டு, ஏவுகணைத் தயாரிப்பு மிக அவசியம் என்றார்.

இந்தியச் செய்திகள்

# ஏவுகணைகளை அழிக்கும் பரிசோதனை வெற்றி



சுமார் 2000 கிலோ மீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைகளை இடையிலேயே வழி மறித்து அழிக்கும் ஏவுகணைப் பரிசோதனையை மத்திய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக் கழகம் (D.R.D.O) வெற்றிகரமாகச் செய்துள்ளது.

இப்பாதுகாப்பு ஏவுகணை மேலும் 5000 கிலோ மீற்றர் அளவிற்கு சென்று தாக்கும் வகையில், எதிர் வரும் 2016 ஆம் ஆண்டிற்குள் மேம்படுத்தப்படும் என்று DRDO தலைவர் சரஸ்வத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் இவ்வகையான ஏவுகணை குறித்து சரஸ்வத் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் முக்கியமான இரு நகரங்களில் இந்த ஏவுகணை தயார் நிலையில் நிலைநிறுத்தப்படும். இருப்பினும் அந்த இரு நகரங்கள் இன்னும் முடிவாகவில்லை என்றார்.

இச்சோதனையில் 2000 கிலோ மீற்றர் தூரம் வரை பாய்ந்து செல்லும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி ஆறுமுறை சோதனை செய்து பார்க்கப்பட்டதாகவும், அதில் பூமியின் வளிமண்டலத்திற்குள்ளும், வெளியிலும் சோதனை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இவ்வகையான ஏவுகணை அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளது. இந்த வரிசையில் தற்போது இந்தியாவும் இணைந்து கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# அமெரிக்க ஜனாதிபதி அழைப்பு பூரிப்பு அடைந்துள்ள ரகுமான்



(லொஸ் ஏஞ்சல்ஸ்)

வெள்ளை மாளிகைக்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அழைப்பு விடுத்தது குறித்து ஏ.ஆர்.ரகுமான் பூரிப் படைந்துள்ளார்.

இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்கு அமெரிக்காவில் உள்ள மியாமி பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்க தீர்மானித்தது. அதையேற்று கடந்த சனிக்கிழமை அமெரிக்கா சென்றார் ரகுமான். பலத்த கரகோஷத்துக்கு இடையே டாக்டர் பட்டம் பெற்றுக்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது,

அமெரிக்க ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் தனிப்பட்ட முறையில் கையெழுத் திட்டு என்னை வெள்ளை மாளிகைக்கு வரச்சொல்லி கடிதம் அனுப்பி இருந்தனர். இதைக் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

இந்த நேரத்தில் எனது வாழ்க்கையில் முக்கிய திருப்பங்களை ஏற்படுத்தி தந்தவர்களை நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன். எனது தந்தை, தாயார் என் வாழ்க்கையை ஒழுக்க நெறிகளுடன் செம்மையாக அமைத்து தந்தனர். திரையுலகில் "ரோஜா" படம் மூலம் எனக்கு முதன்முதலாக வாய்ப்பளித்தவர் மணி ரத்னம்.

இஸ்லாமிய ஞானிகள் என்னை நானே உணர்ந்து கொள்ள வழி காட்டினார்கள். இந்திய ரசிகர்கள் என்னையும், எனது இசையையும் எந்த பாகுபாடும் இல்லாமல் அரவணைத்துக்கொண்டனர்.

அதேபோன்று ஹொலிவூட்டிலும் என்னை ஏற்றுக் கொண்டிருப்பதை உணர்கிறேன் என ஏ.ஆர்.ரகுமான் கூறினார்.

# மேற்கு வங்க மாநிலத்தில் முதலிட விரும்பும் அமெரிக்கா



இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தில் தாம் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பனர்ஜியை சந்தித்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மேற்குவங்க மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களைத் தாம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 52 நிமிடங்கள் வரை இந்த சந்திப்பு இடம்பெற்றதாக மேற்குவங்க மாநிலத்தின் முதலமைச்சர் மம்தாபனர்ஜி கூறினார்.

# நிலநடுக்கப் பாதிப்பு தமிழகத்திற்கு இல்லை



(சென்னை)

இந்தியாவில் எங்கெல்லாம் நிலநடுக்கப் பாதிப்பு ஏற்படும் என்று புவியியல் ஆய்வு நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வரையறுத்துள்ளனர்.

அதில் தமிழகத்தில் எந்தப் பகுதியுமே இல்லை என்பதால், தமிழகத்தில் பூகம்பம் வராது என்று உறுதியாகவே சொல்ல முடியும்.சமீபத்தில் லேசான பூமி அதிர்ச்சியைத் தான் நாம் உணர்ந்தோம். அதுவும், இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிகழ்வின் தாக்கம்தான் என, நிலநடுக்க ஆய்வு மைய இயக்குநர் கோபால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

பூகம்பம் ஏற்படுவதற்கும், அந்நேரத்தில் தொலைபேசிகள் வேலை செய்யாமல் போவதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. பூகம்பம் வரும் முன், அதைக் கண்டுபிடிக்கும் தொழில நுட்பம் உலகளவிலேயே இன்னமும் வரவில்லை.

ஆனால், சுனாமி வருவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன், கண்டுபிடித்து சொல்ல முடியும். சுனாமியும், நேரடியாக நம் நாட்டில் ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவு.

வெளிநாட்டில் எங்காவது சுனாமி ஏற்பட்டால், இங்கு கடற்கரையோரங்களில் பாதிப்பு வரலாம். ஆனாலும், முன்கூட்டியே சுனாமி எச்சரிக்கை கொடுப்பதால், மக்கள் பாதுகாப்பாக வெளியேறி, தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

# பாபர் மசூதி இடிப்பிற்கு அத்வானியின் பேச்சே காரணம்

## சி.பி.ஐ. தெரிவிப்பு

(டில்லி)

பாபர் மசூதியை இடிக்க பா.ஜ.க. மூத்த தலைவர் எல்கே.அதவானி உள்ளிட்ட தலைவர்களின் ஆவேசப் பேச்சும், தூண்டுதல் பேச்சும்தான் காரணம். எனவே அவர்கள் வழக்கு விசாரணையிலிருந்து விடுபட முடியாது, விசாரணையை அவர்கள் நிச்சயம் சந்தித்தாக வேண்டும் என்று சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் கூறபபட்டிருப்பதாவது,

ஆவேசமாக கூச்சலிடுவது, ஒரு சமூகத்தினருக்கு எதிராக இன்னொரு சமூகத்தினரை தூண்டி விடுவது என்பது தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் செயலாகும். எனவே இவர்களைத் தனித்துப் பார்ப்பது என்பது இயலாத காரியம்.

என்வே குற்றப்பத்திரிகையில் இடம் பெற்றுள்ள அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் நிச்சயம் விசாரணையை சந்தித்தாக வேண்டும் என்று சி.பி.ஐ. கூறியுள்ளது.

# விஜய் புகை பிடிக்கும் காட்சி "துப்பாக்கி"யிலிருந்து நீக்கம்




துப்பாக்கி படத்தில் விஜய் புகைபிடிக்கும் காட்சியை நீக்கிவிட்டதாக அப்படத்தின் டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் அறிவித்துள்ளார்.

கடந்த மே 1 ஆம் திகதி இப்படத்தின் ஸ்டில்கள் வெளியானது. அதில் விஜய் புகைப்பிடிப்பது போனற ஸ்டில்கள் வெளியாகின. இதற்கு பசுமை தாயகம் அமைப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்நிலையில் அக்காட்சியை நீக்கிவிட்டதாக முருகதாஸ் அறிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது, படத்தின் விளம்பரத்திற்காக மட்டுமே விஜய் புகைபிடிப்பது போன்ற காட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், படத்தில் புகைப்பிடிப்பது போன்ற காட்சிகள் அதிகம் கிடையாது. ஒரே ஒரு இடத்தில் மட்டும்தான் அந்தக்காட்சி இருக்கும். இப்போது அதையும் நீக்கிவிட்டோம். இனி படத்தின் விளம்பரங்களிலும் இதுபோன்ற காட்சிகள் இடம்பெறாது என்று கூறியுள்ளார்.

# லெனினை விஷம் வைத்து கொன்றாரா ஸ்டாலின்?

## சந்தேகம் கிளப்பும் வரலாற்று வல்லுநர்



(லண்டன்)

ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர் விளாடிமிர் லெனினை, அவரின் தோழர் ஜோசப் ஸ்டாலின் விஷம் கொடுத்து கொன்றிருக்கலாம் என, சரித்திர வல்லுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய புரட்சியாளர் லெனின், ஜனாதிபதியான பின் தனக்கு பின் நாட்டையும், கட்சியையும் வழி நடத்திச் செல்ல தகுதியானவர் ஸ்டாலின் என, முதலில் கருதினார். ஆனால், ஸ்டாலினின் சர்வாதிகாரப் போக்கால், அதிருப்தியடைந்த லெனின், லியோன் ட்ராட்ஸ்கியை கட்சியின் பொதுச் செயலராக அறிவிக்க நினைத்தார். இதைத் தெரிந்து கொண்ட ஸ்டாலின், லெனினை விஷம் வைத்துக் கொன்றுள்ளதாக, நான் கருதுகிறேன் என, ரஷ்ய வரலாற்று வல்லுனர் லெவ்லூரி என்பவர், தனது ஆராய்ச்சிக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

வரலாற்று வல்லுநர் லூரி, தனது ஆய்வுக் கட்டுரையில் கூறியிருப்பதாவது;

ஸ்டாலின், தன் எதிரிகளை விஷம் வைத்துக் கொல்வதை வழககமாகக் கொண்டிருந்தார். இதே பாணியை தான், அவர் லெனின் விஷயத்திலும் கையாண்டிருக்க வேண்டும் ஏனென்றால், லெனின் 53ஆவது வயதில் இறந்த பிறகு, அவரது மூளை இறுகி விட்டதாக பிரேதப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. லெனின், தனது இறுதிக் காலத்தில் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்ற கருத்தும் உண்டு. அதன் பிறகு, அவருக்கு இரண்டு முறை பக்கவாதம் ஏற்பட்டது. முதல் பக்கவாதத்தால், அவர் எழுதும் திறனை இழந்தார். இரண்டாவது பக்கவாதத்தால், அவர் பேசும திறனை இழந்தார். ஆனால், அவர் இறப்பதற்கு முன் வரை, நன்றாக பேசிக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. நன்றாக பேசிக்கொண்டிருந்த நபர், மறுநாளே இறந்து போனதற்கு, அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என கருதுகிறேன். அவரது உடல் இன்னும் செஞ்சதுக்கத்தில் பதப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டிருக்குமா என்ற சந்தேகம் இருந்தால், இப்போது கூட அவரது மூளையை பரிசோதிக்க முடியும். இவ்வாறு லூரி, தனது ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# செப்ரெம்பர் 11 தாக்குதல்; விசாரணைகள் குழப்பத்தில்

(வொஷிங்டன்)

செம்ரெம்பர் 11 தாக்குதலின் பிரதான சந்தேகநபர் காலித் ஷேக் மொஹமட் தொடர்பாக வழக்கு விசாரணை குழப்பமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குவாண்டனாமோ இராணுவ நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், முதல் நாளில் தாக்குதலின் முன்னணி சந்தேகநபர்கள் தொடர்ச்சியாக குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர்.



2001 செப்ரெம்பர் 11 தாக்குதலின் பிரதான சந்தேகநபரான காலித் ஷேக் மொஹமட் மற்றும் ஏனைய நான்கு சந்தேகநபர்கள், 13 மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்த விசாரணைகளின் போதான கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துள்ளனர்.

தமக்கெதிரான கொலை மற்றும் பயங்கரவாத குற்றச்சாட்டுகளை ஐந்து சந்தேகநபர்களும் நிராகரித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டாயிரத்து 976 பேரின் உயிர்களைக் காவு கொண்ட இந்தத் தாக்குதலின் சந்தேகநபருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# புதிய ஜனாதிபதியின் வாழ்க்கைத்துணை; குழப்பத்தில் பிரான்ஸ் வெளியுறவுத்துறை



(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் பிராங்கோய்ஸ் ஹோலண்டே தெரிவு செய்யப்பட்டது முதல், அந்நாட்டு வெளிவிவகாரத் துறை ஒரு பெரிய பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவித்து வருகின்றது.

அது ஒன்றுமில்லை ஹோலண்டே, வலேரி திரியர்வெய்லர் என்பவரை இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்.

ஜனாதிபதியாக பதவி ஏற்ற பிறகு வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியிருக்கும். போப்பாண்டவரைச் சந்திப்பதற்காக ரோமாபுரி செல்வதாக இருந்தாலும், வளைகுடா நாடுகளுக்கும், முஸலிம் நாடுகளுக்கும் செல்வதாக இருந்தால் சில சங்கடங்கள் நேரும்.

திருமணமாகாத தோழியை அரசு நிகழ்ச்சிகளில் அதிகார பூர்வ விருந்தினராக அந்த நாடுகள் அங்கீகரித்து இடம் தராது. மேலும் அவருடைய தங்குமிடம், பயணம், சாப்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடுகளைச் செய்வதிலும் தயக்கம் ஏற்படும்.

எனவே மே மாதம் 15ஆம் திகதி அரசு இல்லமான எலிஸி அரண்மனையில் குடி வருவதற்குள் ஜனாதிபதிக்குத் திருமணம் ஆகிவிட்டால் நல்லது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

வலேரிக்கு வயதுவந்த 2 பையன்கள் இருக்கின்றனர். இதற்கு முன்னதாக 2 முறை திருமணம் செய்து 2 கணவர்களையும் விவாகரத்துச்செய்திருக்கும் வலேரி, பத்திரிகையாளராகவும் பணிபுரிகிறார்.

திருமணம் செய்யாமல் ஜனாதிபதியுடன் வெளிநாடு சென்றால் பிரச்சினை வருமே? என்று ஒரு நிருபர் வலேரியிடம் கேட்டபோது, எங்கே போப்பாண்டவரைச் சந்திப்பதாக இருந்தால் தானே, பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார்.

இது என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை, தேவையில்லாமல் இதில் தலையிட வேண்டாம் என்றும் அந்த நிருபரை அவர் எச்சரித்து விட்டார்.

# அல்கொய்தா முக்கியதலைவர் ஏமனில் கொல்லப்பட்டார்

அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவர், ஏமனில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்கப் படையினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்காவால் தேடப்பட்டுவந்தவர்களின் பட்டியலில் இவரின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2000 ஆம் ஆண்டு அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் பிரதான சந்தேகநபராக இவர் கருதப்பட்டிருந்தார்.

ஃபஹாட் அல் குசே என்ற இந்த நபர், ஏமனின் தென் பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன.

ஏமனில் உள்ள அல்கொய்தா இயக்கத்தை இலக்கு வைத்து அமெரிக்க விமானப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சியாச்சின் பகுதியிலிருந்து படை வாபஸ் இல்லை

## பாகிஸ்தான் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள சியாச்சின் மலைப்பகுதியில் இருந்து படைகளை மீளப் பெற மாட்டோம் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் சவுத்ரி அகமது முக்தார் இது தொடர்பாக நிருபர்களிடம் கூறியதாவது, தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவுடன் சியாச்சின் பகுதி பிரச்சினையை தீர்ப்பது மிகவும் சிரமம்.


இந்தப் பிரச்சினையில் இந்தியா தீவிரமாக உள்ளது. எனவே சியாச்சின் மலைப்பகுதியில் இருந்து இராணுவப் படைகளை திரும்பப் பெற முடியாது. படைகளை திரும்பப்பெற்றால், உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினர் எங்களை கேள்வி கேட்பார்கள். பனிச்சரிவால் உயிரிழந்த வீரர்களின் சடலங்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பாகிஸ்தான் சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. எனவே அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்வதைத் தொடர்ந்து நிறுத்தினால், பாகிஸ்தான் மீது சர்வதேச பொருளாதாரத்தடைகள் விதிக்கப்படலாம் என்று தெரிவித்தார்.



ரஷ்ய ஜனாதிபதியாக விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் பதவியேற்ற பின்னர் தலைநகர் மொஸ்ே விலுள்ள நோவாடைவிட்சி ஆலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபடுவதனைக் காணலாம்.

# விமான தகர்ப்பு முயற்சி முறியடிப்பு



(வொஷிங்டன்)

தங்கள் நாட்டு விமானம் ஒன்றை வெடிகுண்டு வைத்து தகர்க்கும் அல்கொய்தாவின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க உளவுத்துறை மற்றும் பல்வேறு நாடுகளில் உள்ள உளவுத்துறை அமைப்புகளின் உதவியுடன் விமானத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெளிநாடு ஒன்றில் கைப்பற்றப்பட்டதாக எ.ஃப் பி ஐ வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஒபாமாவுக்கு இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதும், மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு புலனாய்வு அமைப்புகளுக்கு உத்தரவிட்டார் என்று தேசிய பாதுகாப்பு சபையின் துணைத் தலைவர் கெய்ட்லின் ஹைடன் தெரிவித்தார்.

# 007 ஜேம்ஸ்பொண்ட்: ஒரு நாயகன் வில்லனான கதை! – 3

**முதல்** ஜேம்ஸ்பொண்ட் படமான 'டாக்டர் நோ'வில் பொண்டின் நட்புப் பெண் நீச்சல் உடையில் வரும் காட்சி பின்னர் வந்த படங்களுக்கு முன்னோடியாக அமைகிறது. அந்த உடையும் கூட 2001 ஆம் ஆண்டு முப்பது இலட்சம் ரூபாய்க்கு 'ஏலம் போயிருக்கின்றது.

படத்தில் மோன்டி நார்மனின் தீம் மியூசிக், வில்லன் ஆய்வுக்கூடம், பொண்டின் கவர்ச்சி உடை நாயகிகள் எனப்படும் பொண்ட் பட குறியீடுகள் உருப்பெறுகின்றன. படத்தயாரிப்பை விட ஆறு மடங்கு வசூலை அள்ளிக் குவித்தபடியால் அடுத்தடுத்த பொண்ட் படங்கள் இன்னும் அதிக செலவுடன் தயாரிக்கப்பட்டன.

மூன்றாவது படமான கோல்ட் .:. பிங்கரில், தங்க முதலாளி ஆரிக் கோல்ட் .:.பிங்கர் அமெரிக்கக் கருவூலத்தைத் தாக்கிக் கைப்பற்ற முயல்கிறான். அதற்கு சீனத்து அணுகுண்டையும் பயன்படுத்த முனைகின்றான். பின்னர் பொண்ட் இதை முறியடிக்கிறான். அப்போது தங்கம் சர்வதேச பண மதிப்பின் அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

எழுபதுகளின் இறுதியில் வந்த 'மூன் ரேக்கர்' படம் ஸ்டார் வோர்ஸ் படத்தின் போட்டிக்காகவும், அமெரிக்கா, ரஷ்யா ஈடுபட்டிருந்த நட்சத்திர சண்டை காரணமாகவும் வெளிவந்தது. இப்படி நிகழுலக அரசியல் போக்குகளெல்லாம் பொண்ட் படங்களில் மலிவாகப் பயன்படுத்தப்பட்டன.

ஐந்தாவது படமான 'யு ஒன்லி லிவ்





டுவைஸ்' படத்தை இங்கிலாந்து ராணி எலிசபெத், பிரீமியர் காட்சியாகவே பார்க்கிறார். கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் பொண்ட் நாவல்கள், படங்களின் விசிறிதான். அவருக்குப் பிடித்த படம் .:.ப்ரம் ரஷ்யா வித் லவ்.

இப்படி பொண்ட் படங்கள் உலகெங்கும் மேற்குலகின் சாகச நாயகனாக வலம் வந்த போது அப்படி முயன்று வந்த அரசுகள், அதிபர்கள் இதை ஆரவாரத்துடன் ஆதரித்தது அதிசயமில்லை.

பதினான்காவது படமான 'எ வியூ டு எ கில்' படத்தில் வில்லன் ரஷ்ய உதவியுடன் கலிபோர்னியாவின் சிலிக்கான் வேலியைத் தகர்க்க முனைவதை பொண்ட் முறியடிக்கிறான்.

பதினேழாவது படமான 'கோல்டன் ஐ' வெளிவரும் போது கோர்பச்சேவின் காலத்தில் ரஷ்யா தனது முன்னைய கெடுபிடிகளை விட்டு மாறிவிடுகிறது. விடுவார்களா, இந்தப் படத்தின் டைட்டில் காட்சியில் கம்யூனிச சின்னங்கள் அரிவாள் சுத்தியல், லெனின் சிலைகளெல்லாம் தகர்க்கப்படுகின்ற பின்னணியில் நடன மங்கைகள் ஆடுகிறார்கள். பெர்லின் சுவர் இடிப்பு, லெனின் சிலை இடிப்பு என்று ஏகாதிபத்திய உலகமே கொண்டாடிய போது ஜேம்ஸ்பொண்ட் மட்டும் கொண்டாடாமல் இருப்பானா என்ன?

ஆனால் இந்தக் கொண்டாட்டம் பத்து ஆண்டுகள் கூட நீடிக்க முடியவில்லை. கம்யூனிச நாடுகள் வீழ்ந்தாலும், முதலாளித்துவ நாடுகள் ஒன்றும் பூவுலகில் சொர்க்கத்தை படைக்க முடியவில்லை என்பதோடு நரக வாழ்க்கையை விஸ்தரித்து வந்த நேரம். பல நாடுகளில் வெடித்த பொருளாதாரப் பிரச்சினைகள் மேற்குலகின் மெக்காவான அமெரிக்காவிலேயே ஆட்டம் போட்ட போது ஜேம்ஸ்பொண்டும் நிறைய தடுமாறுகிறான்.




முதலாளித்துவத்தைக் காப்பாற்ற அவதரித்த பொண்ட் இப்போது முதலாளிகளை வேட்டையாடுகிறான்

2006 இல் வெளிவந்த 'கசினோ ரோயல்', 2008இல் வெளிவந்த 'குவாணடம் ஒ.:.ப் சோலஸ்' எனும் இரண்டு தொடர் வரிசை ஜேம்ஸ்பொண்ட் படங்கள் வழக்கமான பொண்ட் பாணியிலிருந்து நிறைய வேறுபடுகின்றன.

> சாகசங்களை விஸ்வரூப தரிசனமாகக் காட்டித்தான் இது வரை ஜேம்ஸ்பொண்ட் படங்கள் உலகை வலம் வந்தன. இனியும் வரும். ஆனால் ஜேம்ஸ் பொண்ட் இனி யாருக்காக உழைக்க முடியும் என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. அதன்படி அவனது நாயகப் பண்புகள் மறைந்து அவனே ஒரு வில்லன் போல தோற்றமளிக்க வேண்டியிருக்கிறது.

இந்தப் படங்களில் ஒரு புது வில்லன் இயக்கம், குவாண்டம் என்ற பெயரில் வருகிறது. இவர்கள் யார்? பன்னாட்டு முதலாளிகள், அமெரிக்க, இங்கிலாந்து அரசுகளோடு தொடர்புடையவர்கள், இஸ்ரேலின் மொசாட்டில் உள்ளவர்கள் என்று ஜேம்ஸ்பொண்ட் எந்த முதலாளித்துவ உலகைக் காப்பாற்ற இத்தனை காலம் போராடினானோ அந்த உலகத்தின் சூத்திரதாரிகளே வில்லன்களாக மாறுகிறார்கள்.

கசினோ ரோயலில் இரகசியமாக போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளுக்காக ஒரு நிதி நிறுவனத்தை நடத்துபவன் அந்தப் பணத்தை வைத்துப் பங்குச்சந்தையில் சூதாடுகிறான். அதில் பணத்தை இழந்து அதனை மீட்பதற்காக பில்லியனர்கள் விளையாடும் சீட்டு ஆட்டத்தில் ஈடுபடுகிறான். பொண்ட் அங்கு சென்று ஆட்டத்தில் சி.ஐ.ஏ பண உதவியுடன் வென்று வில்லனை அமெரிக்காவிடமே கையளிக்கிறான்.

ஆனால் வென்ற சூதாட்டப் பணத்தை அவனால் மீட்க முடியவில்லை. காதலியையும் இழக்கிறான். காதலியுடன் களித்திருக்கும் போது இனி இந்த பொண்ட் வேலையை செய்யவில்லை, வேறு ஏதாவது நல்ல வேலை செய்கிறேன் என்றும் கூறிவிட்டு இந்த உலகில் அப்படி ஒரு நல்ல வேலை இருக்கிறதா என்று கேட்கிறான். கூடவே எம்.16 உளவுத் துறையின் தலைவர் எம் க்கு ராஜினாமா செய்வதாக மின்னஞ்சல் செய்கிறான்.

> பெர்லின் சுவர் இடிப்பு, லெனின் சிலை இடிப்பு என்று ஏகாதிபத்திய உலகமே கொண்டாடிய போது ஜேம்ஸ்பொண்ட் மட்டும் கொண்டாடாமல் இருப்பானா என்ன?

ஆனாலும் காதலியின் கொலைக்காக அவனது வேலை அடுத்த படத்திலும் தொடர்கிறது. குவாண்டம் ஒ.:.ப் சோலசில் வில்லன் தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் குடிநீர் வளத்தை கைப்பற்றுவதற்கு முயல்கிறான். அதற்காக அங்கு ஒரு இராணுவத் தளபதியின் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைக்கு உதவுகிறான். இவனுக்கு ஆதரவாக அமெரிக்காவின் சி.ஐ.ஏ., இங்கிலாந்து பிரதமரின் நெருங்கிய நண்பர், மொசாட்டில் பணியாற்றி பின்னர் தொலைத்தொடர்பு நிறுவனம் நடத்தும் முதலாளி என்று பலரும் பின்னணியில் இருக்கிறார்கள். இவர்கள்தான் குவாண்டம் எனப்படும் அந்த இயக்கத்தின் அத்திவாரங்கள்.

பொண்ட் இவர்களை விரட்டியவாறு பொலிவியாவுக்கே சென்றாலும் அங்கு அவனால் ஒரு கட்டத்தில் அதிகார பூர்வமாக ஈடுபட முடியவில்லை. எம்.16 உளவுத்துறையே அவனது கைகளைக் கட்டிப் போடுகின்றது. இடையில் அவன் தனது தலைவரின் சங்கேத வார்த்தையைத் திருடி அவர்களது இணைய தளத்தில் நுழைந்து தகவல்களைச் சேகரிக்கிறான். தலைவரது வீட்டிற்கு அவனாகவே நுழைந்து பேசுகிறான். உளவுத்துறை தலைவர் எம் முன்னால் விறைப்புடன ஒரு இராணுவ வீரன் போல அடிமையாக கிடக்கும் முந்தைய பொண்ட் படங்களிலிருந்து இவன் வேறுபடுகிறான்.




எம்.16 உளவுத் துறையிலும் கூட குவாண்டத்தின் நபர்கள் புகுந்து விடுகிறார்கள். எம் இன் பாதுகாவலராக இருக்கும் ஒருவனே வில்லனது கையாள் என்பதையெல்லாம் அவர்களாலேயே நம்ப முடியவில்லை. இறுதியில் தனது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி தலைவர் எம் இன் ஆதரவோடு மட்டும் பொலிவியாவில் அந்த வில்லனைக் கொல்கிறான். இறுதியில் வில்லனுக்கு ஆதரவாக இருந்த சி.ஐ.ஏ தலைவர், மற்றும் இங்கிலாந்து பிரதமரின் ஆதரவாளரெல்லாம் மாற்றப்படுகிறார்கள். அது இன்னமும் அந்த முதலாளித்துவ உலகத்தை காப்பாற்றத் துடிக்கும் பொண்டின் இலட்சியத்திற்காகச் சொல்லப்பட்ட புனைவுதான்.




ஆனாலும் புனைவில் உதித்த இந்த முதலாளித்துவ நாயகன் இனி முழுக்க முழுக்க புனைவையே நம்பி வாழ முடியாது. வோல் வீதியில் 'நாங்கள் தான் 99%' என்று முழங்கும் சராசரி அமெரிக்க மக்களின் அரசியல் விழிப்புணர்வை இனியும் மடை மாற்ற முடியாது. அதன்படி இனி பொண்ட்டின் படங்களில் காட்டியே ஆக வேண்டிய வில்லனாக முதலாளித்துவமே விசுவரூபமெடுத்து நிற்கிறது.

### தானே வில்லனான பிறகு யாரைச் சுடுவார்கள்?

சாகசங்களை விஸ்வரூப தரிசனமாகக் காட்டித்தான் இது வரை ஜேம்ஸ் பொண்ட் படங்கள் உலகை வலம் வநதன. இனியும் வரும். ஆனால் ஜேம்ஸ் பொண்ட் இனி யாருக்காக உழைக்க முடியும் என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. அதன்படி அவனது நாயகப் பண்புகள் மறைந்து அவனே ஒரு வில்லன் போல தோற்றமளிக்க வேண்டியிருக்கிறது.

அது ஒரு நிறுவனத்தை எதிர்க்கும் கலகமாக மாற்றப்பட்டு அவனது பாத்திரம் காப்பாற்றப்படலாம். ஆனால் அதற்கு விலையாகப் பன்னாட்டு நிறுவனங்களையே வில்லனாகக் காட்டும் நிலையில் பொண்டின் படைப்பாளிகள் இருக்கிறார்கள்.

இரண்டில் ஒன்றைப் பலிகொடுக்க வேண்டிய நிலையில் இனி ஜேம்ஸ்பாணடின் படங்கள் எப்படி இருக்கும்? வழக்கம் போல மசாலா காட்சிகள், நீச்சலுடை நாயகிகள் எல்லாம் இருந்தே தீரும். ஆனால் மேற்குலக மக்களின் உணர்வை இனியும் மறைக்க முடியாது என்ற நிலையில் ஜேம்ஸ்பொண்ட் ஒரு பெரும் குழப்பத்தில் நிற்கிறான். அவனது குழப்பத்தை நீக்கி நல்வழிப்படுத்தும் தகுதியை அமெரிக்காவோ, இங்கிலாந்தோ இழந்து விட்டது.

ஆனாலும் அவன் இன்னமும் ஏகாதிபத்தியத்தின் அடியாள்தான். என்றாலும் இந்த அடியாள் இனி நாயகனாக வேடம் கட்டினாலும் நிஜ உலகைப் பொறுத்த வரை அவன் வில்லன்.

# யாழ். குடாவில் சமூக சீரழிவுகள் தடுத்து நிறுத்த கூட்டு நடவடிக்கை



(நல்லூர்)

யாழ். குடாநாட்டு இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துவரும் சமூக சீரழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு தனியார் கல்வி நிறுவனங்களும், யாழ். மாநகர சபையும் கூட்டாக இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாலை யாழ். மாநகர சபை முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுடன் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாநகர முதல்வர், தனியார் கல்வி நிறுவனங்கள் சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சங்ககாலம் தொடக்கம் நெறிப் பிறழ்வுகள் இடம்பெற்று வருகின்றபோதிலும் தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி மாணவர்களை திசை திருப்பி வருகின்றது.

இதுவரை எம்மிடம் 71 தனியார் கல்வி நிறுவனங்களே பதிவுகளை மேற்கொண்டுள்ளன. பதியப்படாமல் தற்போதும் பல நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. இயங்கிவரும் கல்வி நிறுவனங்களில் 90 வீதத்திற்கும் மேற்பட்டவை சீரற்ற சுகாதார வசதிகளுடன் இயங்கிவருகின்றன. அத்துடன் சீரற்ற இருக்கைகள் மற்றும் போதிய காற்றோட்டமின்மையும் குறைபாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

இத்தகைய குறைபாடுகளுடன் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அவற்றின் மீது 2 வார முன்னறிவித்தலில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் கல்வி நிறுவனங்கள் காலை 6.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 5.30 மணியுடன் நிறுவனங்களை மூடுவதன் மூலம் குற்றச்செயல்களை குறைக்கமுடியும் என முதல்வர் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

இதற்கு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்திய கல்வி நிறுவன நிர்வாகிகள் அதனால் ஏற்படும் சாதக, பாதக விளைவுகளை முதல்வருக்கு சுட்டிக்காட்டினர். அத்துடன் தாம் ஒரு சுய கட்டுப்பாட்டுடன் இவ்விடயத்தை கையாள்வதாகவும் தெரிவித்தனர்.

மேலும் இனிவரும் காலங்களில் யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விஜயம் செய்யும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அங்கு நிலவும் குடிநீர், சுகாதாரம் போன்ற வசதிகள் தொடர்பாக கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கு போதிய ஆலோசனை வழங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

## சர்வதேச மட்ட செஸ் போட்டியில் இலங்கை மாணவர்கள் சாதனை



(கொழும்பு)

ருமேனியா, லெஸி நகரில் இடம்பெற்ற சர்வதேச பாடசாலை செஸ் போட்டி 2012இல் இலங்கை சார்பில் போட்டியிட்ட போட்டியாளர்கள் 4 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

36 நாடுகளைச் சேர்ந்த 546 போட்டியாளர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டதோடு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 28 வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர். கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டிகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தன. போட்டியில் கலந்துகொண்ட வீர, வீராங்கனைகள் நேற்று காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது.

## யு.எஸ்.எயிட் பணிப்பாளருடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யு.எஸ். எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜேம்ஸ் பெட்னர் வட மாகாண ஆளுநரை கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் உள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

மூன்று தசாப்த கால் போர் முடிவிற்கு வந்த பின்னர் போர் நடைபெற்ற பிரதேசங்களில் உள்ளூர் கைத்தொழில்கள் முன்னேற்றமடைந்து வருகின்றது எனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டங்கள் என்பன தொடர்பாக ஆளுநரால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது

இச்சந்திப்பின்போது வட மாகாணத்தில் மேலும் புதிய ஆடைத் தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பாகவும் உள்ளூர் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

## ஐ.பி.எல். ருவென்ரி - 20 தொடர் ராஜஸ்தான் வெற்றி



புனே வாரியர்ஸ் 125/6
ராஜஸ்தான் றோயல்ஸ் 126/3
7 விக்கெட்டுக்களால்
ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றி
ஆட்டநாயகன்:- ஷேன் வட்சன்

## திண்மக் கழிவகற்றல்...

உண்மைகள் தெரியவந்திருப்பதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

இந்த ஆய்வின்படி டெங்கு நுளம்புகள் மனிதனை குத்தும் கால எல்லை அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. அதாவது டெங்கு நுளம்பு தினமும் காலை 6.00 முதல் காலை 10.00 மணி வரையும் மாலையில் 4.00 மணி முதல் மாலை 6.30 மணி வரையும் குத்துவதாக ஏற்கனவே நம்பப்பட்டது. ஆனால் இந்நுளம்பு இரவு 10.00 - 11.00 மணி வரையும் குத்துவது புதிய ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றது.

இதேநேரம் டெங்கு நுளம்புகள் தேங்கி நிற்கும் அசுத்தமான நீரில்தான் பல்கிப் பெருவதாக ஏற்கனவே கூறப்பட்டது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தில் 46 வீதம் கிணறுகளில் இடம்பெறுவதும் இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்திருக்கின்றது. இதேவேளை டெங்கு நுளம்பு தனது வாழ்வில் நான்கு தடவைகள்தான் முட்டையிடும்.

ஒவ்வொரு தடவையும் முட்டையிடுவதற்காக பல தடவைகள் மனிதனை குத்தி இரத்தம் குடிக்கும் பண்பை இந்நுளம்பு கொண்டிருப்பதும் தெரிய வந்துள்ளது. ஆனால் ஏனைய நுளம்புகள் முட்டையிடுவதற்காக ஒரு தடவையே மனிதனை குத்தி இரத்தம் குடிக்கும் என்றும் அவர் கூறினார்.

## கிழக்கு மாகாண...

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரதி அமைச்சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்திலேயே கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் சபையை கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

தற்போதைய சூழ்நிலையில் கிழக்கு மாகாண சபையினை கலைத்து தேர்தல் நடத்தினால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் வெற்றியடைய முடியும் என முதலைமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி உட்பட இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து அரச தரப்பு மாகாண சபை உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட அரசாங்கத்திலுள்ள அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைத்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மட்டக்களப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் வெற்றியடைய முடியும் என கிழக்கு மாகாண முதலைமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் இக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது தொடர்பிலேயே இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதே தவிர, முதலமைச்சர் வேட்பாளராக யாரை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் சபையை கலைக்கக்கூடாது என அண்மையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முல்லை...

புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புனரமைக்கப்படாத இவ்வீதியில் பயணிப்பதற்கு சுமார் 3 மணித்தியாலங்கள் தேவைப்படும் நிலையில், புனரமைப்பு பணிகள் பூர்த்தியாகும் பட்சத்தில் அப்பயணம் ஒரு மணித்தியாலமாக குறைவடைந்து விடும் என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கலைக்க...

ஆஜராக வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான அனில் ரத்நாயக்க, சட்டதரணி கருணாரத்ன ஹேரத் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆயிரம்....

திட்டத்தின் முதற்கட்டமாக இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்டிருக்கும் தொழில்நுட்ப பட்டதாரிகள் கடமையாற்ற வேண்டிய பாடசாலையினை கல்வியமைச்சே முழுமையாக தீர்மானிக்கிறதே தவிர இதில் பட்டதாரிகளின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு இடம் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார். ஆயிரம் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு ஒரே தடவையில் ஆசிரிய நியமனம் வழங்குவது இதுவே முதற்தடவையாகுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## வடக்கில்...

கட்டுப்படுத்துவதுடன், நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

அல்லைப்பிட்டிப் பகுதியில் மலேரியா நுளம்பைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் கற்பூரவள்ளிச் செடி மற்றும் சுற்றாடலை பாதுகாக்கும் மீன் வகைகளையும் வழங்கி வருகிறோம்.

மலேரியா நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. மலேரியா நோயைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து தொற்றா நோய்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மலேரியத் தடை இயக்க பொறுப்பு வைத்தியர் சிவசங்கர், தொற்றா நோய் நிபுணர் வை.யோகேஸ்வரன், யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் பி.சிவரூபன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

## புதுக்குடியிருப்பில்...

அறிவித்துள்ளது. இதன்போது 52 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும், 571 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் பற்றிய தகவல்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிறு வீசிய கடும் காற்றினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கே அதிக பாதிப்பு ஏற்பட்டதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் வீசிய பலத்த காற்றினால் முல்லைத்தீவு, பொலன்னறுவை, மாத்தளை, மொனராகலை ஆகிய மாட்டங்களிலுள்ள வீடுகள் சிலவும் சேதமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## இறக்குமதியில்...

காலாண்டில் இறக்குமதிச் செலவு 5.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதேவேளை, 2012 ஆம் வருடத்தின் எதிர்பார்க்கப்பட்ட 8 சதவீத பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக குறைவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, சர்வதேச நாடுகளில் பொருளாதார வளர்ச்சி இறங்கு நிலையான அலகுகளையே கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்காலத்தில் எவ்வாறான தொடர்புகளைப் பேணுவது என்பது குறித்து எதிர்வரும் மாதம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அஜிட் நிவாட் கப்ரால் கூறினார்.

# பிணை எடுத்த சட்டத்தரணிகளுக்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினர்

தென்பகுதியைச் சேர்ந்த வலைத் திருடர்களை பிணையில் செல்வதற்கு உதவிய கல்முனை மாவட்ட சட்டத்தரணிகளுக்கு எதிராக கண்டனப் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்ட மீனவர்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப்படகுச் சொந்தக்காரர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அல்-ஹாஜ் அஸ்லம் தலைமையில் சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் மன்ற கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்கூறப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டது. மேலும் அக்கூட்டத்தில்,

பல வருடங்களாக எமது பிரதேசத்தில் படகுகளின் வலைகள் திருடப்பட்டு வந்துள்ளன. திருடப்பட்ட வலைகள் இன்று வரை கண்டுபிடிக்கப்பட்ட வரலாறுகள் இல்லை. ஆனால் அண்மையில் அம்பாறை பிரதேச படகு ஒன்றிலிருந்து திருடப்பட்ட வலைகள் மாத்தறை பிரதேசத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதுடன் அத்திருட்டுடன் தொடர்புடைய நால்வரை கல்முனை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

அவர்களை பிணையில் செல்லவிடக்கூடாது என்பதற்காக பல முயற்சிகளை எடுத்தோம். ஆனால் எமது கல்முனை மாவட்ட சட்டத்தரணிகள் சிலர் பணத்துக்காக பிணையில் செல்வதற்கு உதவினார்கள். எனவே இவ்விடயத்திற்கு உதவிய கல்முனை சட்டத்தரணிகளுக்கு எதிராகவும் இக்கூட்டத்தில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது. இவ்வலைத் திருட்டு நடவடிக்கையினால் இன முறுகல் ஏற்படும் நிலை ஏற்பட்டது எனத் தெரியவருகின்றது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக அரசாங்கத்தால் வழங்கப்படும் எரிபொருள் மானிய முத்திரையினை வழங்குவதில் அம்பாறை மாவட்ட கடற்றொழில் திணைக்களம் மிக இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றுவதுடன் மீனவர்களின் நலன்களில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் பல மீனவர்கள் தங்களது எரிபொருள் மானியத்தை இழக்கும் நிலையேற்பட்டுள்ளது.

எரிபொருள் மானியம் வழங்கப்படும் ஏனைய தென்பகுதி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் மிக இலகுவான முறையில் தங்களது மானியங்களை பெற்றுக்கொள்கின்றனர். மீனவ சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கல்வி அறிவு குறைந்தவர்கள் அதனைக் கருத்திற்கொண்டு திணைக்கள அதிகாரிகள் செயற்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நடிகை அஞ்சலா செனவிரட்ன நீதிமன்றில் ஆஜரானார்



கொழும்பு நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட தரப்பாக நேற்று செவ்வாய்க்கிழமை ஆஜரான நடிகை அஞ்சலா செனவிரட்ன, தனது முகவரிக்கு தனது பெயரில் ஹரிஸ் போதைப்பொருள் கொண்ட பொதி அனுப்பிவைக்கப்பட்டதன் காரணமாக தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதுடன், தனது உத்தியோகத்தையும் இழந்துள்ளதாகவும் கூறினார்.

குறித்த பொதி தொடர்பில் நடிகை அஞ்சலா செனவிரட்ன கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி 4 மணித்தியாலங்களாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமான எண்ணெய் மண்ணெண்ணெய் ஆனது

(கொழும்பு)

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமானங்களுக்கான 7,500 மெற்றிக்தொன் எண்ணெய்யை ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்ததாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்யின் இரசாயனக் கலவை தொடர்பில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக அதனை நிராகரிக்க நேரிட்டதாக கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இறக்குமதி செய்யப்பட்டிருந்த எண்ணெய்யை, மண்ணெணெய் என்ற அடிப்படையில் பொறுப்பேற்பதற்கு தீர்மானித்ததாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. உலக சந்தையில் விமானங்களுக்கான எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் சமமாக அமைந்துள்ளதால் கூட்டுத்தாபனத்திற்கு எவ்வித நட்டமும் ஏற்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தேசிய வைத்தியசாலைக்கு பொன்சேகா மாற்றம்

(கொழும்பு)

தற்போது நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சரத் பொன்சேகா, அடுத்த இரண்டு தினங்களுக்குள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார் என சிறைச்சாலைகள் ஆணையாளர் பீ.டப்ளியூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அனோமா பொன்சேகா, இருதயம் தொடர்பான மருத்துவ நிபுணர் வஜிர தென்ன கோன் கொழும்பு நவலோகா வைத்தியசாலையை தவிர வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை மேற்கொள்வதில்லை என்பதால், சரத் பொன்சேகாவை, அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதன் மூலம் கடும் அழுத்தங்கள் ஏற்படக்கூடும் என கவலை தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை நிர்வாகமும், சட்டமா அதிபர் திணைக்களமும் இணைந்து, தனது கணவருக்கு குறைந்தளவான சிகிச்சையை வழங்கி, அவருக்கு இயற்கையான ஆபத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் அனோமா குறிப்பிட்டுள்ளார். அதேவேளை தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவருக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, சிறைச்சாலை அத்தியட்சகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

# தமரா கியூபாவிற்கு மாற்றம் பனியுத்தத்துக்கு முற்றுப்புள்ளி

(கொழும்பு)

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான தமரா குணநாயகத்துக்கும் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையிலான பனியுத்தம் நிறைவுக்கு வந்துள்ளது. தமரா இப்போது இலங்கையின் கியூபாவிற்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜெனிவா மனித உரிமை கவுன்ஸில் மாநாட்டில் இலங்கைக்கு தோல்வி ஏற்பட்டதை அடுத்து தமரா குணநாயகம் கியூபாவுக்கு இடமாற்றம் செய்யப்படுவதாக ஏற்கனவே தகவல்கள் கசிந்தன.

தமரா குணநாயகம் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. எனினும் தன்மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்த தமரா குணநாயகம், இந்த இடமாற்றத்தை எதிர்த்து வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, ஜூலை முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் ஜெனிவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாக தான் நியமிக்கப்பட்டுள்ளதாக ரவினதா ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

# தன்னிச்சையான பங்கு வர்த்தகம் ஐ.தே.கட்சி போர்க்கொடி

(கொழும்பு)

த பினான்ஸ் கம்பனியின் பங்குகளை 394 மில்லியன் ரூபாவுக்கு தேசிய சேமிப்பு வங்கி பங்குச்சந்தையில் வாங்க காரணமாக இருந்தவர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்துள்ளது.

இந்த ஊழலுக்கு பொறுப்பானவர்களை பதவிகளிலிருந்து அகற்ற வேண்டுமெனவும் ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். ஜனாதிபதியும் திறைசேரிச் செயலாளரும் இதில் தலையிட்டபோதும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. தேசிய சேமிப்பு வங்கியின் பிரதான அதிகாரி செல்வாக்கு மிக்க ஓர் அரசாங்க அதிகாரியின் கணவன், மனைவியாக இருப்பதில் இந்தக் கொடுக்கல், வாங்கல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு அமுலுக்கு வரும் சாத்தியம் உள்ளதென அவர் கூறினார்.

தேசிய சேமிப்பு வங்கியில் பணவைப்பு செய்தவர்கள் அப்பாவி மக்களாவர். இவர்களில் அநேகமானோர் இளைப்பாறியவர்களும் பிள்ளைகளுமாவர். இது தேசத்தின் தேசிய செல்வத்தையும் வளங்களையும் அப்பட்டமாக கொள்ளையடிக்கும் செயலாகும் இது யாருடைய தூண்டுதலின் பேரில் நடக்கவுள்ளதென திஸ்ஸ அத்தநாயக்க கேள்வியெழுப்பினார்.

இதனால் தேசிய சேமிப்பு வங்கிக்கு 150 மில்லியன் ரூபாவிலும் கூடுதலான நட்டம் உண்டாகும். அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும். மக்களின் பணத்தை எடுத்துச் செல்லும் அதிகாரம் யாருக்கும் இல்லையெனவும் இந்த மோசடிக்குப் பொறுப்பானவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். இதை சாதாரண விடயமாக எடுக்கக்கூடாது என அவர் கூறினார்.

## போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் போதைப்பொருள் மது ஒழிப்பு வார விழிப்புணர்வுப் பேரணி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோவிலில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை கடற்கரையைச் சென்றடையவுள்ளது.

இன்றைய சூழலின் யாழில் தலை தூக்கியுள்ள கலாசார சீரழிவுகளை அடியோடு கலைந்தெடுத்து நல்ல பண்பாடுடைய சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

இப்பேரணியில் அனைவரும் கலந்து கொண்டு சுகாதாரத்தைப் பாதுகாக்க ஒன்றினையுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (116)

## மின்னலின் தாக்கம் திருமலையில் ஒருவர் பலி

திருகோணமலை முள்ளிப்பொத்தானை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

முகம்மது நஸீர் (வயது-49) என்பவரே மின்னல் தாக்கி உயிரிழந்தவராவார். 4 பிள்ளைகளின் தந்தையான இவர் வாகன திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார். இதேவேளை புல்மோட்டைப் பகுதியில் கடலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த படகில் நின்று கொண்டிருந்த 54 வயதான மீரா நெய்னா சஹாப்தீன் மின்னல் தாக்கி கடலில் விழுந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

போக்குவரத்து கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக எதிர்வரும் நாட்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. குறித்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தர அதிகாரிகளுக்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்கியிருந்ததாக சங்கத்தின் செயலாளர் சந்திக்க எப்பிடகடுவ தெரிவித்தார்.


## உடனடி வேலைவாய்ப்பு

### அச்சகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

**தினமுரசுப் பத்திரிகையில் ஒப்செற் (Offset) அச்சுமுறையை முழுமையாகப் பழகி பணிபுரிய ஆர்வமுள்ளவர்கள் (இரவு, பகல் வேலை. பயிற்சிக் காலத்தில் சம்பளமும் வழங்கப்படும்) ஆளணி முகாமையாளரை வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.**

**SORD, KORD இயக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**தினமுரசு,**
**இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.